விலை ரூபா 2-00 12 பக்கங்கள்

ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 கார்த்திகை 7 ரவிஅவ் 20 இதழ் 285
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (23—11—86)

எமது தோழர் மீது புலிகள் சூடு:

இச்செயல் எமக்கு ஐயத்தை ஏற்படுத்துகிறது

ஈ.பி.ஆர் எல் எவ்.

யாழ்ப்பாணம் ஞாயிறு

"கடந்த 21ம் திகதியன்று மாலை பருத்தித்துறை இராணுவ முகாமை படமெடுக்கச் சென்ற எமது மக்கள் விடுதலைப்படைத் தோழன் ஒருவன் தமிழீழ விடுதலைப்புலிகளால் சுட்டுக் காயப்படுத்தப்பட்டார்"

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"பருத்தித்துறையில் இருந்த விடுதலைப் புலிகளின் காவல் முகாமில் கூறிவிட்டே எமது தோழர்கள்

[11ம் பக்கம் பார்க்க]

இந்திய அரசே ★ எமது தகவல் தொடர்பு சாதனங்களை திருப்பிக்கொடு ★ கண்காணிப்பை நீக்கு ★ எம் மக்களுக்காக போராட அனுமதி

நேற்று பிரபா சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பம்

(சென்னை)

★ இந்திய மத்திய-மாநில அரசுகளினால் எம்மிடமிருந்து பறிமுதல்செய்யப்பட்ட தகவல் தொடர்பு சாதனங்கள் உடனடியாக எம்மிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

★ என்மீது போடப்பட்டுள்ள பொலிஸ் கண்காணிப்பு உடன் நீக்கப்படவேண்டும். அல்லாவிடில்,

★ நான் ஜாதுகாப்பற்ற எமது மக்களுக்காக தமிழீழம் சென்று போராடுவதற்கு எந்தவிதமான கடடுப்பாடுமின்றி அனுமதிக்கப்படவேண்டும்.

இக்கோரிக்கைகளை முன் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புத்தலைவர் திரு வே பிரபாகரன் நேற்று சாகும்வரை உண்ணாவிரதத்தை சென்னையில் ஆரம்பித்துள்ளார். திரு பிரபாகரனின் உண்ணா

(11ம் பக்கம் பார்க்க)

அப்பாவித் தமிழ் மக்கள் மீதான

இராணுவ நடவடிக்கைகளை இலங்கை தவிர்க்கவேண்டும்

ஜனாதிபதியிடம் டிக்ஷிற் வலியுறுத்து

புதுடில்லி, நவ 22

'இராணுவ நடவடிக்கைகளை அப்பாவித் தமிழர்கள் மீது மேற்கொள்வதை இலங்கை அரசு தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்று' இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் இன்று ஜனாதிபதி திரு ஜெயவர்த்தனவைச் சந்தித்து வலியுறுத்திக் கூறினார்

நேற்று புதுடில்லியிலிருந்து

(11ம் பக்கம் பார்க்க)

★ இரண்டாவது நாளாக ஷெல் தாக்குதல்

முஸ்லிம் இளைஞர் உட்பட மூவர் பலி; எண்மர் படுகாயம்

ஐந்து கடைகள் பலத்த சேதம்

யாழ்ப்பாணம் ஞாயிறு

யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்று மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் யாழ். ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவரும் வர்த்தகர் ஒருவரும் மற்றும் ஓர் முஸ்லிம் இளைஞரும் பலியானார்கள். எட்டுப்பேர் படுகாயமடைந்தனர். ஐந்து கடைகள் பலத்த சேதமடைந்தன.

இரண்டாவது நாளாக நேற்று கோட்டை முகாமிலிருந்து ஷெல்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

நேற்று காலை 6-30 மணியளவில் வீட்டிலிருந்து சைக்கி

[11ம் பக்கம் பார்க்க]

வீட்டிலுள்ளோர் தடுத்தும் கடையை பார்க்க வந்தார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'வீட்டிலுள்ளோர் தடுத்த போதும் தமது கடைக்குச் சேத மேற்பட்டுள்ளதாகக் கூறி அதனைப் பார்ப்பதற்கு எனது தந்தை வந்தார். நானும் அவருடன் கூட வந்தேன்'

இவ்வாறு பலியான சின்னப்புவின் மகன் நகுலேஸ்வரன் கூறினார்,

அவர் மேலும் கூறியதாவது:

நாங்கள் கடைக்குச் சென்றதும் அபாயச் சங்கொலி கேட்டது, நான் உடனே மலாயன் கபே மண்மூடை அரணுக்கு வந்து மறைந்திருந்தபடி தந்தையையும் கூப்பிட்டேன், அவர் கடையை மூடி விட்டு வீதியை கடந்துவரும் போது ஷெல் தாக்கி என் கண் முன்னாலேயே துடிதுடித்து மரணமானார். (இ)

இரு புலிகளின் போராளிகள்பலி

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஒலுமடுவில் விடுதலைப்புலிகளைச் சேர்ந்த இருபோராளிகள், இராணுவத்தினரின்

[11 ம் பக்கம் பார்க்க]

அறிவித்தல்

கொழும்பு – வவுனியா செல்லும் பிரயாணிகளின் பாதுகாப்பு கருதி எமது R. B ஸ்தாபனம் யாழ். ஆஸ்பத்திரிக்கு பின்பக்கமாகவுள்ள த பினான்ஸ் கம்பனிக்கு அருகாமையில் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. உங்கள் ஆசனங்களை இங்கே பதிவு செய்து கொள்ளுங்கள்.

(மினி பஸ்கள் - சொகுசு பஸ்கள்)

ஆர். பி. (B)

யாழ் — கொழும்பு பஸ்

ஆசனம் பதிவுசெய்யும் இடம்:

நவீன சந்தை (சுபாஸ் முன்பாக)

யாழ்ப்பாணம்.

(C 5966)

நம் இனத்தின்

சுதந்திரம் பறிபோவதையும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது

யாழ்ப்பாணம், ஞாயிறு

"யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சம்பந்தப்பட்ட விவகாரம் தீர்வு இன்றி தொடர்ந்து சிக்கலாகிக் கொண்டு போவதை நம் சமூகத்தின் எதிர்காலத்தில் அக்கறை கொண்டுள்ள எவரும் அலட்சியப்படுத்த முடியாது."

"காணமறிபோன மாணவனை மீட்டுக்கொடுத்து, இந்தப்பிரச்னையை சுமுகமாகத் தீர்த்து வைக்கும் சக்தி எம்மிடம் இல்லையானால். எமது எதிர்காலம் என்ன என்று அலைகலயக்குகி நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்"

இவ்வாறு பல்கலைக்கழக மாணவன் விஜீதரன் காணாமல்போனமை தொடர்பாக யாழ். வைத்தியசங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில்

[11ம் பக்கம் பார்க்க]

நேற்று நான்காவது நாளாக உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம். ஞாயிறு

யாழ் பல்கலைக் கழக மாணவன் விஜிதரன் கடத்தப்பட்டது தொடர்பாக பல்கலைக் கழக மாணவ அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்ட சாகும்வரை உண்ணாவிரதம் நேற்று நான்காவது நாளாக அனுஷ்டிக்கப்பட்டது.

சாகும்வரை உண்ணாவிரத

மனுஷ்டிக்கும் த விமலேஸ்வரனின தாயார் திருமதி தம்பு

(11-ம் பக்கம் பார்க்க)

ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம் ஞாயிறு

யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரனை விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்ட ஊர்வலம்

[11ம் பக்கம் பார்க்க]

வரி விளம்பரம்

விற்பனைக்கு

நீரழிவு வியாதிகளுக்கு உகந்த வைத்தியர்களினால் சிபார்சு செய்யப்பட்ட கோதுமை அரிசி குறுணல் விற்பனைக்குண்டு M G M 777 K K S Road and 208. 1st Cross St, Jaffna. ரெலி போன்; 22611. [C 5066]

Prima Poultry Food எல்லா வகையான பிறிமா கோழித் தீனும், மருந்து வகைகளும், ஒருநாள் கோழிக்குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. Nallur Farm Centre, நல்லூர் வீடியோ செண்டர், 19, முருகேசர் லேன், முத்திரைச் சந்தை, நல்லூர் C 5706

நல்ல இன அல்சேசன் நாய்க்குட்டிகளும் அதே இன இருவயது நாயும் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்புகொள்ளவும் விபரங்கட்கு; கற்பக விலாஸ், வதிரிச்சந்தி, கரவெட்டி. (பஸ் இலக்கம்; 751) [C 5913]

தட்டச்சு இயந்திரங்கள் [Typewriters], Portables Standard உடன் விற்பனைக்கு Fudo Enterprises, Jaffna Road, Manipay. (Bank of Ceylon Bitsman அருகாமையில்.) (C-5918)

Nel Farm பிறவுன் சேவற் குஞ்சுகள் 25ந் திகதி செவ்வாய்க்கிழமையும், Golden Comet சேவற்குஞ்சுகள் 30ந் திகதி ஞாயிற்றுக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராசா பிறதர்ஸ், பிரம்படி கொக்குவில் (C-5942)

புத்தம் புதிய நாஷனல் T V 20'' Remote Control உடன் விற்பனைக்கு உண்டு ஞாயிற்றுக்கிழமை 23-11-86 எந்நேரமும் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. 23186 'கந்தன் கருணை' 179, கோயில் வீதி நல்லூர். (C 5950)

சுத்த இன பொமரேனியன் Dark Brown 2 மாத ஆண் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. மனோன் மாஸ்டர் அரசடி நவாலி தெற்கு மானிப்பாய். (C 5964)

சகலவிதமான பாவித்த வீட்டுத் தளபாடங்கள் குளிர் சாதனப்பெட்டி தேக்கு அலமாரி, Showcase, கண்ணாடி மேசை, கசற் றேடியோக்கள், Grundig T. V, சுருதிப்பெட்டி, Gas Cooker, சிலின்டர், Kenwood Oven, Pyrexwares, Glasswares, சில்வர் பொருட்கள், ஹோல்செற்றிகள், Johnson, Dinner Set, Tea Sets, பெல்ஜியம் கண்ணாடிகள், Bath tub, Zink, Electric Organ with கசற்றேடியோ. M தியாகராசா, 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (C-5956)

Westpoint Deep freezer 6 5 CFT விற்பனைக்குள்ளது, M 64, மே/பா Dyna Ads 476 பிரதான வீதி, சுண்டுக்குளி (சென்ற் ஜோன் கல்லூரி முன்பாக). [C-3139]

Sony T V 20'' — 2032— 2020 National வீடியோ டெக் N V 450 EN. 370 EN — 300 EN - National 2000 EG — Sharb வீடியோடெக் National NV 100 போட்டபிள் டெக். National 250 Two in one — Sanyo T V 20'' B/W. S T L. வீடியோ கிளப், No. 3, நவீன சந்தை மேல்மாடி, திருநெல்வேலி. C 5952

விற்பனைக்கு

தரமான 36 அங்குல (Paper Cutter) பேப்பர் கட்டர் விற்பனைக்குண்டு. தொடர்புக ஆனந்தன், சுடுவிழுந்தான் தெல்லிப்பழை. [C-5944]

Christambu Farm Golden Comets சிவப்பு சேவற்குஞ்சுகள் 26 - 11 - 86 புதன் கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. பதிவு செய்வோருக்கு பேட்டுக்குஞ்சுகள் விநியோகிக்கப்படும் Nallur Farm Center [நல்லூர் வீடியோ செண்டர்] 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தை, நல்லூர். C-5963

வகுப்புக்கள்

பொறிமுறைப் படவரைஞர் Radio and T.V. வகுப்புகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்: 26-11-86 புதன். Able Technic 1 Studies, கே.கே.எஸ்.ரோட், சுன்னாகம். [C-5921]

Spoken English புதிய பிரிவு இருமணித்தியால வகுப்புக்கள் செவ்வாய், வியாழன் மாத்திரம். காலை 7 மணி — 9 மணி. ஆரம்பம்: 27-11-86 S. B. Iyar, 12, வைமன் வீதி நல்லூர். [C-5946]

க. பொ. த. (உயர்) 1987 விஞ்ஞான பிரிவிற்கான வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன. விலங்கியல் திரு. நாகநாதன், தாவரவியல் திரு குணசீலன், இரசாயனம் திரு. ரஞ்சன், பௌதிகம் திரு விக்கி, கணிதம் திரு ஆறுமுகம். Modern Education Centre, Karaveddy. C-5926

மணப்பந்தல்

உயர் சைவவேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த 25 வயதுடைய செவ்வாய் குற்றமற்ற பொறியியலாளரான மணமகனுக்கு அதேகுலத்தைசேர்ந்த 21 வயதுக்குட்பட்ட அழகிய பண்பான படித்த மணமகள் தேவை. விபரங்களுக்கு: விளம்பர இல. C5907 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C5907

கனடாவில் நிரந்தரமாக வசிக்கும் யாழ் B. sc படித்த வரும் தற்போது கெமிக்கல் எஞ்சினியரிங் [2 வதுவருடம்] செய்பவருமான 30 வயது முடிந்த பரணி நட்சத்திர முடைய உயர்குல இந்துமணமகனுக்கு சிறந்த அழகும் B sc க்கு சமமான கல்வியும் தகுந்த சீதனமுடைய மணமகளைபெற்றோர் தேடுகின்றனர். விருப்பமுடையோர் சாதகக்குறிப்புடனும் தொடர்புகொள்ளவும். விளம்பர இல C 5961 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் [C-5961]

MATRIMONIAL

Wanted a Hindu Vellala Doctor bellow 30 years for a Lady Doctor. House in Colombo and substantial amount of Cash and Jewellar are offered as Dowry Apply Advt. No. C 5917, e/o Eelanadu, Jaffna. C 5917

Parents seek bride from respectable Hindu Vellala family for son 31, residing in Canada. Mars in Lagna Contact with horoscope and all particulars. No brokers please Advt No A 3140, c/o Eelanadu, Jaffna. A 3140

தேவை

அனுபவமுள்ள பிளேட்டின் மெஷின் மைன்டரும், பழகுவதற்கு ஆர்வமுள்ள இளைஞரும் தேவை நேரில் வரவும்: தேவி அச்சகம், 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 5958)

சேவை

எங்கள் பாம் சிவப்பு-வெள்ளை முட்டைகள் பெருமளவில் விற்பனை செய்கிறோம், வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. புதிய முகவரி; கிருண்ட் கொட்டகை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன்பாக, யாழ்ப்பாணம். (C5957)

எப் பொருட்களானாலும் புதியவைகளானாலும், பழையவைகளானாலும் வாங்கவும், விற்கவும் தினமும் வாருங்கள் எங்களிடம் புதியனவும், பழையனவுமாகிய சகலவித பொருட்களும் மலிவு விற்பனைக்கிருக்கின்றன. லக்கி பெனிபிட் கோ லிமிட்டட் (சந்திக்கருகாமையில்) கோப்பாய். [C 5943]

கைரேகை, கிரகநிலை, எண் சோதிடம் என்பனவைக் கொண்டு தங்கள் வாழ்வின் உண்மை நிலை கூறப்படும் மணமகன் மணமகள் தேவையானவர்கள் செவ்வாய்க் குற்றமுள்ள சாதகர்களும்) சகல மதத்தவர்களும் தொடர்பு கொள்ளலாம் பிரபல கைரேகை எண்சோதிட நிபுணர், செ. நாகேந்திரராசா 174/16 கோவில் வீதி, நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடி C 5772

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

கேள்விப் பத்திரம்

மூவாயிரத்தி எண்ணூற்றி ஆறு (3806) வெற்றுச் சாக்குகளுக்கு கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது ரூபா 2.50 செலுத்தி சங்கத்தில் பெற்றுக் கொண்ட பத்திரத்தில் பொது முகாமையாளர். ஊர்காவற்றுறை ப நோ. கூ சங்கம். ஊர்காவற்றுறை என்ற விலாசத்திற்குகேள்விப்பத்திரங்களை 26-11-86ந் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும் விண்ணப்பதாரி ரூ. 750/- வைப்புப் பணம் செலுத்துதல்வேண்டும்

பொதுமுகாமையாளர்,
ஊர்காவற்றுறை. [C-3134

தனியார் பாதுகாப்புச் சேவை

வடபிராந்திய போக்குவரத்துச் சபை

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்சாலை வவுனியாசாலை ஆகிய இடங்களில் பாதுகாப்புச் சேவையினை நடாத்த விரும்பும் தனியார் பாதுகாப்புச் சேவை ஸ்தாபனங்களிடமிருந்துவிண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களுக்கு-

பொது முகாமையாளர்
வட பிராந்திய
போக்குவரத்துச் சபை
பலாலி ரோட்
கோண்டாவில்

என்ற முகவரிக்கு 19 - 12 - 1986ந் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

சி. கனகரத்தினம்
தலைவர் / தகவுடை
அதிகாரி
வட பிராந்திய
போக்குவரத்துச் சபை
[A 3135]

அன்பளிப்பு

உடுவில், சனி வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் உடுவில் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு ஆ மகாலிங்கத்தின் ஏற்பாட்டின் மீது திருமலை அகதிகளுக்கு பெறுமதி மிக்க உடுபுடவைகளை அன்பளிப்பாக வழங்கினர்.

''சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி, உடுவில், மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள அகதிகள் முகாம் ஆகிய இரு முகாம்களிலும் தங்கியுள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் 500 ரூபா குறையாத அன்பளிப்பு புடவைகளை வழங்கினர்.

மொத்தம் 112 குடும்பங்கள் இவ்வாறு அன்பளிப்பு பொருட்களை பெற்றுக்கொண்டன.

SALE

Brand new Nationl T. V 20'' with [Remote control] Contact: 23-11-86 on sunday- Telephone No: 23195. Kanthan Karunai'', 179, Temple Rd. Nallur. (C-5949)

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ சங்கம் பளை

வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

பச்சிலைப்பள்ளி ப நோ கூ சங்கத்தில் 5000 வெற்றுச்சாக்குகள் விற்பனைக்குண்டு கேள்விப் படிவங்கள் ரூபா 100/- மீளப்பெறும் வைப்பாகச் செலுத்தி சங்கஅலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் ஏற்கனவே செலுத்தியோர் இம்முறை செலுத்த வேண்டியதில்லை வெற்றுசாக்குகளைசங்க அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். விண்ணப்பங்களையாவும் 6-12-86க்கு முன் முத்திரையிடப்பட்ட பதிவுத் தபால்மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைத்தல்வேண்டும் தபால் உறையின் இடதுபக்க மூலையில் ''வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம், பளை.
[A 3141]

பெருங்கதை வழிபாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் உள்ள பிள்ளையார் கோவிலில் விநாயக சஷ்டி விரத வழிபாடுகளுக பிள்ளையார் கதைப் புராண படனமும் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன. விநாயக சஷ்டியன்று படன பூர்த்தியும் விசேடவழிபாடுகளும் நடைபெறும்.

படையினர் தேடுதல் நடத்தினர்

ஒட்டுசுட்டான், சனி ஓமந்தை இராணுவ முகாமிலிருந்து நீண்டகால இடைவெளியின் பின் இராணுவத்தினர் வெளியே வந்து 2 மைல் தூரத்தில் உள்ள பகுளம்குளம் வளக்குவைத்தகுளம் ஆகிய பகுதிகளைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

கரைச்சி வடக்கு ப நோ கூ சங்கம் பரந்தன்

கேள்வி விண்ணப்பம்

வெற்றுச் சாக்குகள்

எமது சங்கத்திலுள்ள வெற்றுச் சாக்குகளுக்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் செய்ய விரும்புபவர்கள் சாக்குகளை நேரில் பார்வையிட்டு, விண்ணப்ப வைப்புப் பணம் ரூபா 110/- (ரூபா 100/- திருப்பி வழங்கப்படும்) செலுத்தி, விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி பதிவுத் தபால்மூலம் 'பொது முகாமையாளர், கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம், பரந்தன்'' என்ற முகவரிக்கு 5-12-86ந் திகதிக்கு முன் (அடித உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்ப விபரத்தினை எழுதி) அனுப்புதல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்கம், பரந்தன்.
[A-3138]

தேவை

சைவ அனாதை இல்லம், திருநெல்வேலி [முத்துத்தம்பி வித்தியாலயம்) ஆண்/பெண் பொறுப்பு/உதவியாளர் தேவை. தகமை: சேவை மனப்பான்மை, நிர்வாக, விவசாய, தையல், மனையியல் அனுபவம். நேர்முகப் பரீட்சை: 24-11-86 மாலை 3 மணி, இல்லவிடுதி செயலகம் [தங்கியிருக்க விரும்புவர்கள் மாத்திரம் விண்ணப்பத்துடன் வரவும்]

(C 5962)

முக்கிய அறிவித்தல்

வரையறுக்கப்பட்ட த சென்றல் பிஞன்ஸ் கம்பனியில் யாழ்ப்பாணப் பகுதிகளில் வாகனங்களுக்கும் பாவனைப் பொருட்களுக்கும் பிஞன்ஸ் வசதி பெற்று பணம்செலுத்த வேண்டிய சகல வடிகைையாளர்களுக்கும் எம்மிடம் பிஞன்ஸ் செய்யப்பட்ட வாகனங்களையும் பாவனைப்பொருட்களையும் வைத்திருப்பவர்களின் கவனத்திற்கும்.

தாங்கள் செலுத்தவேண்டிய முழுத்தொகையையும் 31-12-1986 ற்கு முன் செலுத்தும் சந்தர்ப்பத்தில் விஷேட சலுகைகள் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை திரு. S. பத்மநாதன் யாழ் மெட்டல் ஏஜன்சீஸ் அன்ட் டிஸ்றிபியுட்டர்ஸ், K. K. S. Road கோண்டாவில் அல்லது இலக்கம் 8, வீரக்கோன் கார்டன்ஸ், கண்டி அல்லது திரு S. கந்தசாமி. முகாமையாளர் யாழ்ப்பாணக் கிளையுடனோ தொடர்புகொண்டு மேலதிக விபரங்களை அறிந்து கொள்ளவும்.

-- பொதுமுகாமையாளர்.

த சென்றல் பிஞன்ஸ் கம்பனி லிமிட்.,
யாழ்ப்பாணம்.
[A3142]

ஜனாதிபதி கென்னடியைக் கொலை செய்தது யார்?

63-ம் ஆண்டு - இதே மாதம் 22ம் திகதி.

அன்றுதான் அமெரிக்காவின் புகழ்பெற்ற ஜனாதிபதிகளுள் ஒருவரான ஜோன் ஃபிட்ஜ் ஜெராஸ்ட் கென்னடி, ரெக்ஸாஸ் மாநிலத்தில் டல்லஸ் நகரில் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தவேளை சுட்டுக் கொலைசெய்யப்பட்டார்.

★

ஜனாதிபதி கென்னடி கொலை செய்யப்பட்டு சரியாக 23 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன வென்றாலும் இக்கொலையின் பின்னால் பல மர்மங்கள் உள்ளன இவை இன்னும் தீர்க்கப் படாமலேயுள்ளன

யார் கொன்றது?

கென்னடியைச் சுட்டது லீ ஹார்வே ஒஸ்வால்ட் என்பது இக்கொலைபற்றிய விசாரணைகள் நடத்திய வாரன் கமிஷனின் முடிவாகும்.

யார் இந்த ஹார்வே ஒஸ்வால்ட்?

இங்குதான் மர்மம்உள்ளது. பல சுயாதீன நிறுவனங்கள் நடத்திய விசாரணைகளின்படி குறைந்தது இரு ஒஸ்வால்டுகள் அல்லது 'ஒரிஜினல்' ஒஸ்வால்ட்டைப் போன்ற சிலர் இக்கொலையுடன் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்பதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

61ம் ஆண்டு ஜனவரி மாதம் குற்றம் சாட்டப்பட்ட ஒஸ்வால்ட் சோவியத் யூனியனில் இருந்த சமயம்—

நியூஓர்லியன்ஸ் மாநிலத்தில் உள்ள போரிட் கார் வதி னைக் கம்பெனியுடன் இரு நபர்கள் 10 ட்ரக்குகளை வாங்கும் ஒப்பந்தமொன்றினைச் செய்தனர். அப்போது விற்பனவுப் பத்திரங்கள் அந்த இருநபர்களில் ஒருவரான ஒஸ்வால்ட்டின் பெயரில் பதியப்பட வேண்டுமென அவ்விருவரும் கோரியுள்ளனர் இவ்விருவரும் பிரதிநிதித்துவப்படுத்திய கம்பனியின் பெயர் ஜனநாயக கியூபாவின் நண்பர்கள்' ஆகும்.

63-ம் ஆண்டு 25ம் திகதி—

ஒஸ்வால்ட், மெக்ஸிக்கோ-நியூஓர்லியன்ஸுக்கு இடையில் பஸஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்ததாகச் சாட்சியங்கள் கூறின ஆனால், அதே நேரத்தில் ஒஸ்வால்ட் எனத் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட ஒருநபர் டெக்ஸாஸ் மாநிலத்திலுள்ள 'படையினர் தேர்த்தெடுக்கும் அலுவலகத்தினுள் 'சென்று சுமார் 30நிமிடங்களாக அங்குள்ள அதிகாரிகளுடன் உரையாடிக்கொண்டிருந்தார்.

இதேநேரத்தில் லியோன் ஒஸ்வால்ட் என்பவர் டல்லாஸ் நகரிலுள்ள (டெக்ஸாஸ் மாநிலம்) திருமதி ஒடியோ என்பவரின் வீட்டில் வேறிரு தென்னாபிரிக்க நாட்டவருடன் இருந்தார். கியூபா தேசத்தவரான திருமதி ஒடியோவின் குடும்பம் காஸ்ட்ரோ எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குப் பெயர் பெற்றது லியோன் ஒஸ்வோல்ட் இவ்வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்தில் அவருடன்வந்திருந்த தென்னாபிரிக்கரும் ஒருவர் திருமதி ஒடியோவுக்குப் போன்பண்ணி, "ஜனாதிபதி கென்னடியைக் கொலைசெய்ய லீயே ன் ஒஸ்வோல்ட் விரும்புகின்றார்" எனக் கூறியுள்ளார்.

இரு மாதங்களின் பின்னர் திருமதி ஒடியோ ஆஸ் த்திரியில் சேர்க்கப்பட்டார். ஏன்...? கென்னடி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் லியோன் ஒஸ்வால்டே என அவர் அடையாளம் காட்டியதே இதற்குக் காரணம்.

63 நவம்பர் 22-கொலைநடைபெற்ற சில நிமிடங்களில்—

திரு. ஆர். க்ரேய்க் என்ற பொலிஸ் அதிகாரி, கென்னடி சுடப்பட்ட இடத்தினருகிலிருந்த ஸ்தாபனமொன்றின் பக்கமிருந்து வீதியை நோக்கி ஓடிவந்த நபரொருவர் அங்கு நின்றிருந்த கார் ஒன்றினுள் ஏறிப்போவதைக் கண்டார். அக்கார் தென்னாபிரிக்க பிரஜையின் சாடையை உடைய ஒருவரால் ஓட்டப்பட்டதாகவும் அவ்வதிகாரி கூறினார். காரில் புறப்பட்டுச்சென்ற இந்நபர், க்ரேய்கின் கூற்றுப்படி, லீ ஹார்வே ஒஸ்வால்ட்ஆலார் க்ரேய்கின் சாட்சியம் இன்னொருவரினால் உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனால் உத்தியோக அறிக்கைகளின்படி இதற்குமுன்பே 'ஒஸ்வால்ட்' (குற்றம் சாட்டப்பட்டவர்) கொலை நடந்த இடத்திலிருந்து புறப்பட்டுபோய்விட்டார்!

பிடிபட்டவர் அப்பாவியா?

நாம் மேற்கூறியவற்றின் மூலம் ஜனாதி தி கென்னடி 63 நவ. 9ம் திகதி, மியாமிமாநிலத்தில்வசிக்கும் தீவிர வலதுசாரியான திரு. மில்ரியர் என்பவர் தமது நண்பரொருவரிடம், ஜனாதிபதி கென்னடியை படுகொலை செய்யும் திட்டமொன்று தீட்டப்பட்டுவருவதாகக் கூறினாராம். கென்னடி, அலுவலகக்கட்டிடமொன்றிலிருந்து உயர்சக்தி வாய்ந்த ரைபிள் ஒன்றினால் சுடப்படுவார் எனவும் மில்ரியர் தமது நண்பரிடம் கூறியுள்ளார் அதுமட்டுமன்றி கொலை நடந்து சிலமணி நேரத்தில் மக்களை ஏமாற்றுவதற்காக கொலையுடன் சம்பந்தப்படாத ஒருவரைப் பொலிசார் கைது செய்வர் எனவும் அந்நபர் 'நம்பிக்கை' தெரிவித்துள்ளார்

மில்ரியரின் நண்பர் உண்மையிலேயே ஒரு பொலிஸ் உளவாளியாவார். அவர் இவ்வுரையாடலைப் பதிவுசெய்து மியாமி பொலிசாரிடம் ஒப்படைத்தார். விசாரணைகள் நடைபெற்றபின் வழக்குமூடப்பட்டது

நவ 22ம் திகதி மில்ரியர் மீண்டும் தனது நண்பருக்கு போன்பண்ணிதான் தற்சமயம் டல்லாஸ் மாநிலத்தில் இருப்பதாகவும், கென்னடியும் அங்கு வரவுள்ளதாகவும் கூறியது ன் இதன் பின்னர் என்றுமே ஜனாதிபதி மியாமி வரமாட்டார் என்றும் கூறியுள்ளார் (ஜனாதிபதி நவ 18ல் மியாமி செல்லவிருந்ததாராயினும் பின்னர் விஜயம் ரத்தாகியது)

கொலை நடந்த அடுத்தநாள் மில்ரியர் தனது நண்பருக்கு போன் பண்ணி "எல்லாம் சரியாக நடந்துவிட்டது" என்று கூறினாராம் லீ ஹார்வே ஒஸ்வால்ட் கைதுசெய்யப்பட்டிருப்பது குறித்து கவலைப்படவேண்டாமெனக்கூறிய மில்ரியர் ஏனெனில் அவருக்கு ஒன்றுமே தெரியாது எனக்கூறியுள்ளார். பின்பு மில்ரியர் பொலிசாரினால் விசாரணை செய்யப்பட்டபோது தான் ஜனாதிபதிக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததை மறுத்துள்ளார்.

> ஜனாதிபதி ஜோன் கென்னடியைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒஸ்வால்ட் உண்மையிலேயே குற்றவாளிதானா.....?

நகல் ஒஸ்வால்ட்

தோமஸ்டேவிஸ் - 111 ரெக்ஸால்மாநில இளைஞன் ராணுவத்தில் பணிபுரிந்தவன் 58-ம் ஆண்டில், 21 வயதில், டெட்ரோயிட் மாநில வங்கியொன்றில் கொள்ளையடிக்க முயன்ற குற்றச்சாட்டில் ரெக்ஸாஸுக்கே மீண்டும் 62 ம் ஆண்டுவரை பரீட்சாத்த கண்காணிப்பின் கீழ் அனுப்பப்பட்டார்.

63 நவ 2-ம் திகதி டேவிஸ் தனது மனைவியுடன் அமெரிக்காவிலிருந்துபுறப்பட்டுலண்டன், பாரிஸ், ஸ்பெயின் வழியாக மொரொக்கோ அடைந்தார் டிசம்பர் மாதம் அவர் அந்நாட்டு பொலிசாரினால் ஆயுதங்களை விற்க முயன்றதற்காக கைதுசெய்யப்பட்டார் அவரிடம் 'ஒஸ்வால்ட்', கென்னடி கொலை ஆகியவை பற்றிக் குறிப்பிடப்பட்ட கடிதம் ஒன்று இருக்கக்காணப்பட்டது! அவரது நண்பரொருவரின் சாட்சியப்படி கொலை நடந்த அன்று அவர் அல்ஜீயர்ஸ் சிறைச்சாலையில் இருந்துள்ளார்.

விஷயத்துக்கு வருவோம் டேவிஸ் ஒஸ்வால்ட் ஆகிய இருவரும் இரட்டைச் சகோதரர்களைப் போன்று காணப்பட்டனர். ஒரே உயரம், அளவு, வயது, முக சாடை அனைத்திலுமே டேவிஸ் ஒஸ்வால்டை ஒத்திருந்தார்.

ஒஸ்வால்டை கொலை செய்ய முயன்ற ஜக் ரூபிக்கும் டேவிஸுக்குமிடையில் கள்ளக் கடத்தல் தொடர்பிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

டேவிஸின் மூன்றாவது மனைவி (டேவிஸ், கென்னடி கொலைசெய்யப்பட்டு சிறிது நாளில் 3 வது முறை மணம் செய்தார்) கென்னடியைக் கொலைசெய்தது யாரெனத் தமக்குத் தெரியுமென கணவர் தம்மிடம் கூறியதாகப் பின்னர் கூறினார். டேவிஸ் 73-ம் ஆண்டில் இறந்து போனார். இறக்கையில் கென்னடி கொலை சம்பந்தமான மர்மத்தையும், அது அவருக்கு தெரிந்ததாயின் தம்முடன் கொண்டுசென்றார்,

ஒஸ்வால்ட் போன்ற இன்னொருவர், அல்லது சிலர் இக்கொலையுடன் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்ற யூகங்களை வாரன்கமிஷன் நிராகரித்துவிட்டது. கென்னடிகொலையின் பின் பதவியேற்ற லிண்டன் ஜோன்சன், சட்டமா அதிபர் ரொபேர்ட் கென்னடி, எவ் பி ஐ இயக்குநர் எட்ஜர் ஹூவர் போன்ற முக்கியஸ்தர்கள் இக்கொலைவழக்கும், விசேடமாக 'நகல் ஒஸ்வால்ட்' சம்பந்தமான சிக்கல்களும் விரைவாகத் தீர்க்கப்படவேண்டுமென விரும்பியது இதற்குகாரணமாயிருந்தவர்கள் அல்லது வேறு 'சக்திகள், காரணமாயிருந்திருக்கலாம்.

எப்படியாயினும் உலகின் சக்திவாய்ந்த நாடான அமெரிக்க ஜனாதிபதி ஒருவரின் படுகொலைசம்பந்தமானமர்மம் தீர்க்கப்படவில்லை என்பதே உண்மை சுபாஸ்சந்திரபோஸின் மர்மமரணம் போன்ற மர்மங்கள் வரிசையில் இதுவும் சேர்ந்துவிட்டது. இம்மர்மம் தீர்க்கப்படும்வரை லீஹார்வே ஒஸ்வால்ட் குற்றவாளியா இல்லையா என்பதும் மர்மமாகவே இருக்கும்.

இ. செந்தில்

சனசமூகநிலைய சமாஜ நிர்வாகிகள்

சாவகச்சேரி, சனி

சாவகச்சேரித் தொகுதி சனசமூக நிலையங்களின் சமாஜ அங்குரார்ப்பணம் கூட்டம் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். தவநாயகம் தலைமையில் சாவகச்சேரி நகரசபையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர் கே. வாமதேவன், உப தலைவர் ஆ. நடராஜா, செயலாளர் செ. சுப்பிரமணியம், உப செயலாளர் கு. நித்தியகுமார், பொருளாளர் எஸ் வைத்திலிங்கம்,

நிர்வாக சபை உறுப்பினர்கள்: க. மு. சிவகுரு, பாலசண்முகநாதன், கா. இலங்கைநாயகம், என். கே. துரைசிங்கம், சிவக்கொழுந்து, செ. அம்பலவாணர்.

இக்கூட்டத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அன்ரன் அல்பிரட், தலைமைச் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி த. பாஸ்கரன், சாவகச்சேரி உ. இ. அதிபர் க. துரைராஜா, நகரசபைச் செயலாளர் த. நவரட்ணராஜா ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

வீதிமறிப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், சனி

யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ். பரியோவான் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்கள் கோஷங்களை எழுப்பிய வண்ணம் வீதிமறிப்புப் போராட்டம் செய்தனர்.

விவசாயிகளே!

உங்கள் வயல்களில் நெல்லுடன் போட்டியிட்டு வளரும்

கோழிச்சூடான், நெற்சப்பி, மொண்டி, குதிரை வாற்புல், ஆடிப்புல், பன்கோரை வகைகளை

● சேர்கோப்பூர் 36% 450 மி. லீ. ரூ. 69/- 3. லீ. ரூ. 410/-

(புரொபனில் — 3, 4 டீ. பி. ஏ.)

பாவித்து சிறப்பாக கட்டுப்படுத்தி கூடிய விளைச்சலை உறுதி செய்துகொள்ளுங்கள்.

பாயர் இரசாயனம் விவசாயிகளின் பெருவிளைச்சலின் உறுதுணை.

BAYER

ஹேகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10

இது ஒரு ஜேர்மன் மேற்கு தயாரிப்பு [A 3023]

இன்றைய பலன்

மாதம்: ஐப்பசி
திகதி: 7 (1986-11-23)
கிழமை: ஞாயிறு
திதி: ஸப்தமி
பி. இ வரை
நக்ஷத்திரம்: ஆயிலியம்
பி. இ. வரை

மேடம்

துணிச்சலுடன் காரியங்களை சாதிப்பீர்கள். இனபந்துக்களின் மத்தியில் பூசல்கள்தோன்றும். கொடுக்கல் வாங்கல் பிணக்கும் ஏற்படும். தொழில்துறையில் அதிக கவனம் செலுத்தவும் சிலருக்குப் புதிய வாழ்வும் மலரும்

இடபம்

பிறர் மூலம் நன்மையான சம்பவங்கள் இடம்பெறும். எதிரிகளைச் சூழ்ச்சி பலமாக விருக்கும். தொழிலில் மந்தநிலை காணும். பிரயாணத்தைப் பின்போடவும். குடும்பவழியாலும் நன்மைபிறக்கும்.

மிதுனம்

குடும்பத்திலும் பூசல்கள் தோன்றும் பகைகள் அதிகரிக்கும். பொன்னான சந்தர்ப்பம் இன்று கிடைக்கும். தொழில் சமவிருத்தியுண்டு. அமைதியான வாழ்வும் உண்டு.

கடகம்

தனவரவுமுண்டு கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு. வேண்டாத நடவடிக்கையைத் தவிர்க்கவும். தொழில்துறையிலும் போட்டிமனப்பான்மையைத்தவிர்க்கவும் களஸ்திரம் சேரும்.

சிங்கம்

எதிரிகள் தாக்குவர் பிறர் விடயத்தில் தலையிடாதிருக்கவும் துணிச்சலுடன் காரியத்தைச் சாதிப்பீர்கள். சிறிய விஷ பயத்திற்குமிடமுண்டாம். தொழில்முயற்சி நல்வழிக்குவித்திடும்.

கன்னி

முன்னேற்றம் தடைப்படலாம். தொல்லைகள் உருவாகும். மயக்கும் மொழிகளில் பணத்தை இழக்க நேரிடும். குடும்பத்திலும் மகிழ்ச்சியுண்டு. அமைதியுடன் நாளைக் கருக்கவும்.

துலாம்

எதிலும் தடுமாற்ற நிலை. மாதுருவழியாலும் மனதிற்கு நிம்மதிபிறக்கும். மனமகிழ்வாழ்வு இன்றுமலரும். பந்த பாசம் பரவசப்படுத்தும். தொழில்துறையிலும் அவதானம் வேண்டும்.

விருச்சிகம்

நலன் தரும் சம்பவங்கள் இடம்பெறும் விபரீதம் விளையும் வாழ்க்கையில் புதிய அபிவிருத்திதோன்றும். ஆயுத பீடையுண்டு- உடல் நலம் பாதிக்கப்படலாம்.

தனுசு

வியாபாரத்துறையில் மந்த நிலைகாணப்படலாம் எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாகவிருக்கும். எவ்வியத்திலும் அவதானம் வேண்டும். தொழில்நிலை மாற்றமுமுண்டு. குடும்பமேம்பாடுமுண்டு.

மகரம்

இல்லத்தில் இனிமை பிறக்கும். உடல் நலத்தைப்பேணி நடக்கவும். பணவிடயத்தில் முன்னெச்சரிக்கை வேண்டும். மனைவாழ்விலும் மகிழ்ச்சிகிடமுண்டு தொழில்விடயம்மகிழையைத்தரலாம்.

கும்பம்

நீண்டநாள் கொடுக்கல்வாங்கல் இன்று நிவர்த்தியாகும் நண்பர்மூலம் தொல்லை உருவாகும் குடும்பத்திலும் நிம்மதி பிறக்கும் வெளியிடத்தும் பயணம் மேற்கொள்ளப்படலாம். வாகனம் செலுத்துவோர் அவதானம்வேண்டும்.

மீனம்

சிறுவிபத்து மேற்படலாம். தொழில்சீர்கெடும். புது மனை கட்டுவதிலும் ஆர்வம்பிறக்கும் கொடுக்கல்வாங்கல்மூலம் விரோதம் தென்படும். எண்ணியதை அடைய முன்னணியில் நிற்பீர்கள்.

திருமலை
க.வே.ரவீந்திரன்

நீயே துணை ஐங்கரா! எனக்கு!!

ராகம்:- நாட்டை தாளம்:- ஆதி

பல்லவி

நீயே துணை ஐங்கரா—எனக்கு
நீயே துணை ஐங்கரா—என்றும்
—(நீயே.....)

அனுபல்லவி

சுழலும் உலகிலே சுகமேதும் காணாது
உழலும் எனக்கேதும் உயர்வான வழிகாட்ட
—(நீயே.....)

சரணம்

வேதங்கள் போற்றிடும் வேழமுகனும் நீயே!
நாதங்கள் ஊற்றெழும் நாயகனும் நீயே!!
ஞானங்கள் தோற்றிடும் ஆனைமுகனும் நீயே!
ஞாலங்கள் ஏற்றிடும் நாதனும் நீயே ஐயா!!
—(நீயே.....)

--முருகு

(இன்று 23-11-86 விநாயகர் விரதத்தின் ஏழாவது நாளாகும்.)

'சிங்களஇன தாபகரைபோல நாமும் மிதக்கிறோம்'

கொழும்பு, வியாழன்

"சிங்கள இனத்தின் தாபகர் ஒரு குறிக்கோளின்றியே கடலில் மிதந்து போய்கொண்டிருந்தார் — இலங்கையை அடையும் வரை, இப்போது நாங்களும் மிதந்து கொண்டிருக்கிறோம்."

இவ்வாறு கூறினார் லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுசெயலாளர் பேர்னாட் சொயிஸா அமெரிக்க டாலரின் பெறுமதி 32 இலங்கை ரூபாய்கள் ஆகும் வரை நாணய மாற்று விகிதத்தை 'மிதக்க' வைப்பது (Float) என நிதி அமைச்சுக்கும் உலக வங்கிக்கும் இடையே உத்தியோகப்பற்றற்ற உடன்பாடொன்று உண்டு எனவும் அவர் கூறினார்

புதிய வரவு-செலவுத் திட்டம் பற்றி தமது கருத்தினைத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார் (ஊ)

கூட்டம்

உடுவில், சனி

கசரோக நோய்பரவாது தடுக்கவும் தடுக்கவும், அதனைக்கட்டுப்படுத்தவும், நோக்கமாக கொண்டு உடுவில் சுகாதார பிரிவில் கசரோகதடுப்பு சங்க அங்குரார்ப்பணகூட்டம் இம்மாதம் 27ம் திகதி இராமநாதன் கலலூரியில்நடைபெறவுள்ளது,

கிரிக்கெட்
பாகிஸ்தான் 4-157

கராச்சி, நவ. 22

மே. இந்திய-பாகிஸ்தான் அணிகளிடையே கராச்சியில் நடைபெறும் 3-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின், இரண்டாம் நாள் ஆட்ட இறுதியில் பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 157 ஓட்டங்களைப் பெற்றது. மே இந்திய அணி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 240 ஓட்டங்களைப் பெற்றது. (சி)

புதிய சட்டத்தரணி

ஆனைக்கோட்டை வடக்கைச் சேர்ந்த செல்வி ஜீவரஞ்சிதம் சுந்தரம் அண்மையில் உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ். சர்வானந்தா மற்றும் நீதியரசர்களான அத்துகோரல, டி சில்வா ஆகியோர் முன்னிலையில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்

இவர் இலங்கை சட்டக்கல்லூரி இந்து மகாசபை முந்நாள் உபதலைவரும் இரத்மலானை இந்துக்கல்லூரி பழையமாணவியும் காணிக்குடியேற்றத்திணைக்கள ஓ. ஏ. பி. சுந்தரத்தின் கனிஷ்டபுத்திரியும் அரசாங்க சட்டத்தரணி சு. கிறிஸ்கந்தராசாவின் சகோதரியுமாவார்.

"அராஜகத்தை எதிர்த்து ஜனநாயகத்தை நிலைநிறுத்தவே எமது போராட்டம்"

— பல்கலைக்கழக அமைப்புக் குழு

யாழ்ப்பாணம், ஞாயிறு

"அராஜகமானது ஆங்கில, சிங்கள ஏன்தமிழ் மேலாதிக்க வடிவில் வந்தாலும் அதனையும் எதிர்த்து மக்களின் ஜனநாயகத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காகவே எமது போராட்டமென்பதை மக்களிடம் மரண வாத்திரையில் மூலமாவது விடிவுகிட்டும் என்ற உறுதியுடன் போராடும் போராளிகளில் இலட்சியங்களின் மீது ஆணையிட்டு கூறுகிறோம்".

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழு சார்பில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது"

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"சிறிலங்கா அரசு கடந்த காலங்களில் தமிழ்மக்களுக்கு எதிராகக்கட்டவிழ்த்து விட்ட அரசபயங்கரவாதத்தினால் மக்கள் அல்லல்பட்டுக்கொண்டிருக்கின்றனர்

"யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுடன் மக்கள் இணைந்து சிறிலங்கா அரசுக்கெதிராகவும் ஈழத்தில் ஜனநாயகத்துக்காகவும் போராட வேண்டும். இதைவிடுத்து எமது போராட்டத்தை தமிழ் ஈழத்திற்கெதிரானதாகக் காட்ட முயலும் சில தீயசக்திகள் எமது நியாயமான ஜனநாயகப் போராட்டத்தை ஆதரிப்பதாகக் கூறிக்கொண்டு எமது போராட்டத்துக்கு எதிரான சில நடவடிக்கையும் பிரச்சாரங்களையும் சில வெளியீடுகளையும் வெளியிடுவதன் மூலம் மக்களைத் திசைதிருப்பி எமது போராட்டத்தின் அடிப்படை உரிமைகளை மறுக்க சதி செய்கின்றன"

போராட்டத்தை ஆதரிக்கும் அதே நிலையில் எமது நியாயமான சிறிலங்கா அரச பயங்கரவாதத்திற்கு எதிராகவும் போராடவேண்டும். எமது போராட்டத்தின் நோக்கமானது உள்நாட்டில் மக்களின் அடிப்படை உரிமையான ஜனநாயகத்திற்காகவே. அதன் அடிப்படையில் எமது சாகும்வரை உண்ணாவிரதப்போராட்டத்தில் குதித்துள்ள ஆறு போராளிகளும் ஜனநாயகத்தை நேசித்து இப்போராட்டத்தைமுன்னெடுத்துக்கொண்டிருக்கும் ஏனைய மாணவர்களும், அராஜகமெனும் பெரும் அரக்கனுக்கெதிராக எமது உயிர்களைத் துச்சமென மதித்துப் போராடிக்கொண்டிருக்கின்றோம்.

"எமது இப்போராட்டத்தின் நோக்கத்தையும் எமது உணர்வுகளையும் மனிதாபிமான அடிப்படையில் மதிக்கத் தவறின் அராஜகம் எனும் அரக்கனால் எமது உயிர்கள் பறிபோவது திண்ணம்

எனவே எமது மக்கள் எங்களைப் புரிந்து எங்கள் போராட்டத்தின் நோக்கத்தை மதித்து எந்தவிதமான அடக்குமுறைகளுக்கும் ஜனநாயக மீறல்களுக்கும் அராஜகங்களுக்கும் அடிபணியாமல் நாங்கள் பேசவேண்டும்! எழுத வேண்டும்! வாழவேண்டும்! என்ற ஜீவாதார உரிமைகளின் அடிப்படையிலே போராடப் புறப்பட்ட எம்மோடு சேர்ந்து போராடி எமது ஜனநாயக உரிமைகளையும் நிலைநிறுத்திக்கொள்ளவேண்டும்.

பயிற்சி அளிக்க முடிவு

உடுவில், சனி

சாரணத் தலைவர்கள் ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை இருகலைக்கூறுகளாக அளிப்பதற்கு காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்கம் முடிவு செய்துள்ளது இவர்களை மேற்படி பயிற்சிகளை அளிப்பதற்கான அனுமதியினை இலங்கை சாரணர் சங்கம் வழங்கியுள்ளது.

இப்பயிற்சிகளை பெறவிரும்பும் சரண ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களைதமது அதிபர் ஊடாக திருமதி ஆர். இரத்தினவேல் மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்குமாறு சாரணர் மாவட்ட ஆணையாளர் திரு நா. போஜன் கேட்டுள்ளார்.

நியமனம்

மாவிட்டபுரம், சனி

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்கத்தின் புதிய மாவட்ட ஆணையாளராக திரு நா. போஜன் இலங்கை சாரணர் சங்கத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, மானிப்பாய் தொகுதிகளை உள்ளடக்கிய காங்கேசன்துறை மாவட்ட சாரணர் சங்கத்தின் உதவி மாவட்ட ஆணையாளராக சிறந்த பணியாற்றிவந்த இவர் தற்போது மாவட்ட ஆணையாளராக நியமனம் பெற்றுள்ளார்.

மீண்டும் சைக்கில் திருட்டு

சாவகச்சேரி, சனி

சாவகச்சேரி நகரத்தில் சைக்கிள் திருட்டுக்கள் மீண்டும் தலைஎடுக்க ஆரம்பித்துள்ளன.

கடந்த வாரம் சாவகச்சேரி சந்தையை அண்மித்த பகுதிகளில் சில சைக்கிள்கள் களவாடப் பட்டுள்ளன எனத் தெரிய வந்துள்ளது.

பூட்டிவைக்காத சைக்கிள்களே இவ்வாறு களவாடப் பட்டன.

திருமணம்



சிறீ (Bubby)

தனு (Thana)

அன்புடையீர்!

நிகழும் அட்சய வருடம் கார்த்திகைத் திங்கள் 13-ம் நாள் (29-11-86) சனிக்கிழமை மாலை 4.58 முதல் 6-48 வரையிலான சுபமுகூர்த்தத்தில்

எமது புதல்வன்
சிறிஸ்கந்தா
(Ceylon Tobacco Co.)
அவர்களுக்கும்

எமது புதல்வி
தனரஞ்சனி
(L. B. Finance)
அவர்களுக்கும்

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் திருவருள் துணையால் நிகழவிருக்கும் திருமணவைபவத்திற்கு வருகைதந்து, புதுமணத் தம்பதிகளை வாழ்த்தி அவர்களுடன் விருந்து போசனத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

சி. இராசரத்தினம்
தம்பதிகள்,
வறுத்தலைவிளான்,
தெல்லிப்பழை

த. சிவசம்பு
தம்பதிகள்,
120/7, காலி வீதி,
தெகிவளை,

கொழும்பு விலாசம்:-
NO: 4, 27th Lane,
Inner Flower Road, Colombo-3 (C-5859)

எமது சிறுகதை

வெளிச்சத்துக்கு வா!

மரத்திலிருந்து இறங்கி வந்த கோழிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் காணப்பட்டன.

''என்ன பூராயம் பார்த்துக் கொண்டு நிக்கிறாய்? அந்தக் கத்தியை எடன், நான் பாளை சீவப் போகவேணும்.....''

அந்தச் சிறு கிராமமே துயில் கலையும் விடியலின் சந்தடியில் அவள் எதைப் பார்த்துக் கொண்டு நின்றாள் என்பது அவளுக்கே தெளிவாகவில்லை.

அவர்களது சிறு குடிலுக்கு முன்னால் மழைக்கு முளைத்துப் பசபசவென்று வளர்ந்திருக்கும் புல்லுகளைத்தான் பார்த்தாளா?

அல்லது அதற்கப்பால்,

''எனக்கு நேற்றுத்தான் சாப்பாடு தரேல்லை இன்டைக்காவது தருவியா?'' என்று வாய்திறந்து கேட்காவிட்டாலும், விழி திறந்து கெஞ்சுகிற, கட்டி நிற்கும் நாய்க்குட்டி 'ஜிம்மி'யைப் பார்த்தாளா?

அல்லது அதற்குமப்பால்

காலைக்கூட்டமடங்கித் தன் வழமையான முகத்தை அடைய ஆரம்பித்திருக்கும் தெருவைப் பார்த்தாளா?

அல்லது தெருவின் மறுபக்கத்தில்,

முன் வீட்டிலிருந்து கம்பீரமாய் மண்வெட்டியைத் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு நடக்கும் தம்பி முருகனை.....?

முருகன் இவளைப் பற்றி இப்போது என்ன நினைப்பான்?

''புருஷனுக்குப் பயந்த பெண்டில்.....'' என்று நினைப்பானோ?

''அன்பையும், பாசத்தையும், அறிவையும் மதிக்கத் தெரியாத பிண்டம்'' என்று நினைப்பானோ?

அல்லது,

''தன்ரை நிம்மதிக்காக இன்னொரு சீவனைப் புண்படுத்தப் பயப்பிடாத பிசாசு'' என்று நினைப்பானா?

முசுமுசுவென்று முகமெல்லாம் மயிர் வளர்த்துக் கொண்டு நிற்கும் கணவனின் உரப்புக் கூடிய சத்தத்தில் அதிர்ந்துபோய், அவள் கத்தியை எடுக்கத் திரும்பியபோது அவன் மீண்டும் கத்தினான்,

''அடியடா, புறப்படலையிலை எண்டானார். நீ என்ன விண்ணாளம் பாத்துக்கொண்டு நிண்டனி எண்டு இப்ப வெல்லோ தெரியுது அங்கை முருகன்ரை இத்தினித் தலைக் கறுப்புத் தெரிஞ்ச உடனை இஞ்சை உனக்குக் கையும் ஓடேல்லை. காலும் ஓடேல்லை அதுதானே பாத்தன்..''

வார்த்தைகளைச் சுள்ளென்று அவள் மேல் விழுத்தி அவன் நக்கலாக ஒரு சிரிப்புச் சிரித்தான்.

தன்னுடைய எல்லா உணர்வுகளையும் குழி தோண்டிப் புதைத்து, அந்தப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கையும் எடுத்த பின்னர்.....

மீண்டும் அவன் அதைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தது அவளினுள்ளே பெரியதோர் எரிச்சலையும் சினத்தையும் மூட்டியது. அவனது சொற்சாட்டை சுளீரென மனதினுள் கூர்வையாகப் புகுந்து தாக்கினாலும், அதற்கான தூண்டற் பேறுகள் எதையும் காட்டாமலே அவள் மௌனமாகக் கத்தியை எடுத்துக் கொடுத்துவிட்டுக் குடிலுக்குள் நுழைந்து பானையைக் கழுவி அடுப்பிலே ஏற்றினாள்.

நெக்கி நிறம் மாறிப்போன அவளது உடையைப் போலவே புனிதமாய் எப்போதும் புதிதாய் இருந்த அந்த உறவும்?

அந்த நினைவுகள் சாரி சாரியாய் வலியும் கசிவும் அலசலும் கலந்து வருவதை எவ்வளவு முயன்றும் அவளால் தவிர்க்க முடியவில்லை.

''அக்கா எல்லுப்போலை தேயிலையும் சீனியும் தருவியே தேத்தண்ணிக்கு?'' என்று கேட்டபடி மூக்கிலே சளி ஒழுகக் கிழிந்த காற்சட்டையைத் தூக்கிச் செருகியபடி வந்து நிறகும் ஐந்து வயது முருகன்.

''கந்தப்பாவின்ரை நடுவிலாள் பெரிசாயிட்டாளாமெல்லே. லவுஸ்பீக்கர் பிடிச்சுத் திறமான கொண்டாட்டம் அக்கா. நான் போகப் போறன் பலகாரம் தின்ன...''

என்று ஊர்ப்புதினங்களைக் காவிக் கொண்டோடிவரும் பத்துவயது முருகன்

''எங்கடை ஊரிலை இளவட்டனுகளெல்லாம் இந்தக் கள்ளுக் குடியிலை நாசமாய் போகுதுகள் அக்கா. எனக்கென்டா... அந்த மனமே பிடிக்குதில்லை'' — சிந்தனையுடன் வந்துநிற்கும் பதினைந்து வயது முருகன்.

''கஷ்டப்பட்டு வேலை செய்யிறது நாங்கள். அப்பாளிக்கிறது மட்டும் அவையே? இதுக்கொரு முடிவுகட்டவேணும்...'

—போர்க்கொடி. தூக்கிப் 'பெரிய சாதிக்கார'ருடன் போராட அயத்தமாய்க் சங்கணம் கட்டிக்கொண்டு புறப்படும் இருபது வயது முருகன்.

''ஒரு இழவும் விளங்காமல் நிக்கிறாய் அக்கா. இந்தா இந்தப் புத்தகத்தைப் படிச்சுப் பார் நாலு புத்தகம் வாசிச்சாத்தான் உலக நிலவரங்கள் தெரியும்...''

பல அறிவியல் நூல்களை அவளிடம் கொண்டுவந்து நீட்டும் இருபத்தைந்து வயது முருகன்.

''எங்கடை மண்ணை மீட்கிறதுக்கு நானும் உழைக்கப் போறன்...'' என்று சிரித்தபடி கூறிப் பயிற்சிக்குப் போன இருபத்தாறு வயது முருகன்.

எப்போதுமே அவர்கள் உறவில் 'தூய்மை' தவறிப்போனதில்லை. அவள் திருமணம் செய்தபோதும் அந்த உறவு உறுதி பெற்றிருந்தது.

அவன் அவளுக்கு எப்படியோ ஒரு தூரத்து முறையில் உறவினனாகத்தான் இருக்கவேண்டும். என்ன முறை என்பது அவளுக்குத் தெரியவில்லை. அது தேவையாயும் இருக்கவில்லை. அவளுக்கு அவனைவிட மூன்று நாலு வயது கூடுதலாக இருக்குமென்பதால் அவன் அப்போதிருந்தே அவளை 'அக்கா' என்று அழைத்து வந்திருக்கிறான்.

''என்ன உவன் முருகன் உன்னோடை நெடுக மினைக்கெடுறான்'' என்று அவள் திருமணமான புதிதில் அவள் கணவன் கேட்டபோது அவள் பெரிதாக அதிர்ந்துதான் போனாள். இப்படியும் யாரும் தங்களைப் பார்க்கக் கூடும் என்ற சிந்தனையே அப்போதுதான் அவளுக்குள் புதிதாக முகிழ்த்தது.

''உனக்கு என்னோடை கதைக்கப்பிடிக்காது. அவனோடை எண்டால் நல்லாக் கதைச்சுக் கொண்டிருப்பாய்.....''

''அவனைக் கண்டால் ஒரு நிமிசத்திலை தேத்தண்ணி கொணந்திடுவாய். நான் முறிஞ்சு முறிஞ்சு வேலை செய்துபோட்டு வந்திருக்கிறன். தேத்தண்ணி கொண்டர இவ்வளவு நேரம் செல்லுது...''

ஆரம்பத்தில் இந்தக் குத்தல் பேச்சுக்களை அவள் சிரித்துச் சமாளித்தாள். பின்னர் சில காலம் பயந்து அவனுடைய அனுமதிக்கு இரந்து நின்று செய்து பார்த்தாள். பின்னர் அடம்பிடித்துத் தனது செயலில் எவ்வித தவறுமில்லை என்று சான்றுகளுடன் வாதாடிப் பார்த்தாள். இறுதியாக,

''சின்ன வயதிலை இருந்து 'அக்கா, அக்கா' எண்டு ஏதோ அவன் என்னிலை அன்பாய் இருக்கிறான். அவனை நீ வராதை இஞ்சை எண்டு எப்பிடி நான் சொல்லுறது?'' என்று அழுதும் பார்த்தாள்.

இறுதியாக அவன் வந்தபோது நிகழ்ந்த அறிவு பூர்வமான அந்த உரையாடல் அதை ஆயிரம் முறை அவள் நினைத்துப் பார்த்துவிட்டாள்.

''எங்கடை விடிவுக்கு இன்னும் கனகாலம் இல்லையக்கா..''

''எப்பிடித் தெரியும் உனக்கு?''

''எங்கடை சின்னையாகூட இப்ப பெடியளைப் புழுகிறார். தென்னிலங்கை அரசியல் வாதியைப் பாதுகாப்புக்காக எங்கடை பெடியள் கையிலை குடுக்கிற நிலை வந்திட்டுதே..... பிறகென்ன?''

''குழவிக் கூட்டுக்குக் கல்லெறியிறது மாதிரி எங்கடை பெடியள் அவங்களோடை சொறியிறது சாகிறது நாங்கள் எண்டு சின்னையா முந்திப் பேசிக்கொண்டு திரிஞ்சவர்.''

''அதுதான் அப்படிப்பட்ட சின்னையாவே இப்ப அவங்கடை கெட்டித்தனத்தைப் புழுகிறார்... இனி மலர்ந்து வாற எங்கடை நாட்டிலை எங்கடை பாரம்பரியப் பண்புகள், கலை கலாசாரங்கள் பேணப்படுறது பற்றி நாங்கள் சிந்திக்கவேணும்.....''

''அப்ப எங்கடை பாரம்பரியப்பண்புகள் இப்ப கனக்க மாறிட்டுதோ.....?''

''கனக்க மாறேல்லை. அடிப்படை சரியாய்த்தான் இருக்குது. மேலாலை கடல் அலைம திரிச் சிலதுகள் மாறியிருக்குது.....அதைப் பற்றி நாங்கள் இனிக்கவனிக்கப் போறம்.....''

தொடர்ந்து அவன் தமது திட்டங்களை விளக்கினான். மினி சினிமாக்களைத் தணிக்கை செய்தல், கிராமங்களதோறும் கலாசார அவைகள் அமைத்து மறைந்து போகும் கலைகளை வளர்த்தல், மக்களிடம் சுதந்திர உணர்வை ஊட்டுதல்.....சூ.....அவன் மனதில் ஊறி ஊறி மிதக்கும் எண்ணப் பெருக்குகள்...!

ஆனால் இதன் பிறகு அவள் கணவனின் 'புறுபுறுப்பு' அதிகமாகியதைப் பொறுக்க முடியாது, இறுதியாக ஒரு நாள்,

மழை பிசுபிசுத்ததோர் மாலை நேரத்தில், உதடும் தொண்டையும் காய்ந்து உணர்வுகள் வற்றியிருந்த நிலையில், சம்மட்டியால் ஓங்கி அடித்தது போன்ற வேதனை நெஞ்சைக் கவ்வியிருக்க, உயிர் நெருப்பிலே விழுந்து துடிக்க. அவள் முருகனிடம் சொல்லிவிட்டாள்.

''நீ இஞ்சை வாறதும் என்னோடை கதைக்கிறதும் இவருக்குப் பிடிக்கேல்லை. நீ இனிமேல் இந்தப் பக்கம் வராதை முருகன். உன்னுடைய எண்ணங்களெல்லாம் கட்டாயம் நடக்கும். அதுக்கு என்ரை மானசீகமாள வாழ்த்தும் இருக்கும். ஆனால்...'' எப்படியோ சொல்லிவிட்டாள்!

சொல்லிவிட்டு உள்ளேவந்த போது, தரைபிளந்து தலைகுப்புற விழுந்ததோர் உணர்வு தான் அவளிடம் ஏற்பட்டிருந்தது. அவன்-முருகன்-எத்தகைய உணர்வுடன் வெளியேறினான் என்பதை அவள் பார்க்கவில்லை.

ஆனால் ! அவளுக்குத் தெரியும். அவன் 'கட்டுப்பாடு' உள்ளவன். அந்த நிகழ்வுக்குப்பின்னர் அந்த வீட்டுப்பக்கம் எட்டியும் பார்க்கவில்லை.

இப்படி நடந்த பின்னரும்... இவர் அதைப்பற்றி மீண்டும் குத்திக் காட்டுவதென்றால்...!

சங்கிலித் தொடராகத் தொடர்ந்துவந்த நினைவுகள் மேலும் மனதினுள் புகாமல் மனதையும் கதவையும் சாத்திவிட்டு அவள் அடுப்பை ஊதினாள்

''எடி...பிள்ளை... பொன்னி! என்னடி கிடக்குத் தின்ன?'' வெளியே சின்னத்தையின் குரல் வெண்கலத்தில் தட்டியது போலக் கணீரென்று கேட்டது.

''இப்பதன் உலை வைச்சிருக்கிறன் நேற்றையான் பழஞ்சோறு எப்பன் கிடக்குது. வேணுமே? தின்னப் போறியே?''

கேட்டபடி வெளியே வந்த பொன்னியை, இவள் நிர்மலமாய் வருகிறாளா என்றே என்னவே உற்றுப்பார்த்தாள் சின்னத்தை ''உவன்... அறுந்தவன்... உன்ரை மனுஷன்... எங்கையடி போட்டான்?''

ஏதோ ஒருவழியில் சின்னத்தை அவளது கணவனுக்கு 'மாமி' முறையாக வேண்டும் என்பதும்...அதனால்தானோ என்னவோ அவள் ஊர்முழுதுக்கும் சொந்தம்போல் வாழ்ந்து வந்தாலும் தன்னிடம் ஓர் அலாதிப்பிரியம் காட்டுவாள் என்பதும் பொன்னிக்கு நினைவு வந்தன

''பாளை சீவப் போறதெண்டு சூணவத்தைத் தறைப்பக்கம் போறாரெணை...''

''ஓ..ஓ.. அந்தப் பக்கம் தானே வீடு....''

கிழவி தனக்குள் முணுமுணுத்தாள். ''ஆற்றை வீடு?'' இவள் எதையுமே புரிந்துகொள்ளவில்லை.

''என்னடி தெரியாமல்தான் கேக்கிறியோ! அங்கை நாகம்மாவுக்கு வயித்திலை பூச்சி புழு உண்டாயிட்டுதெண்டு சனம் கதைக்குது...''

''நாகம்மாவோ? வயிரமுத்தற்றை நாகம்மாவோ? அவள் இன்னும் கலியாணம் செய்யேல்லை. உனக்கு வயதுபோகப் போக நல்லா அறளை பேந்திட்டுது. அதுதான் பூச்சி புழுக் கதையள் கதைக்கிறாய்...''

தன் அழகான வெண்முத்துச் சிரிப்பை உதிர்த்தாள் பொன்னி. ''எடி விசரி உன்ரை புரியனெல்லே அந்தப் பக்கம் போறதெண்டு ஊர்ச்சனம் கதைக்குது. உனக்குத் தெரியாதோடி இந்தக் கோதாரி? நான் தெரிஞ்சுமெல்லோ நீ கண் சாடையா விட்டுட்டிருக்கிறாய் எண்டு நினைச்சன்...''

'சொரேர்' என்றது பொன்னிக்கு!

கோகிலா மகேந்திரன்

சரத்கால விடியலிலே....

சரத்கால விடியலிலே சாளரத்தின் விளிம்பினிலே
மழைக்கால முகிற்குலத்தின் மாய்மாலக் கூச்சலிலே
சளைக்காமல் தன்விழிகள் சார்ந்து நின்ற சூனியத்துள்
இளைக்காமல் எதிர் கொண்டாள் ஏகாந்த நினைவுகளை.

பாடி அலுத்தவளின் பரிதாபம் யாரறிவார்
ஆடி அலுத்தவள் மேல் அனுதாபம் யார் தருவார்
தேடி அவள் துயரைத் தீர்த்துவைக்க யார் வருவார்
வாடி உதிர்ந்த பின்னே வக்கணைகள் கூறிடுவார்.

குடிபோதை நிலையினிலே கும்மாளம் போட்டிடுவார்
வடியாத உணர்வுகட்கு வடிகாலும் தேடிடுவார்
பிடிசாம்பர் ஆகும்வரை பேயாட்டம் ஆடிடுவார்
விடிகாலைப் பொழுதினிலே வெறும் வானைக் காட்டிடுவார்.

துரத்துகின்ற நினைவுகளின் துயர் அறியா மூடரிடம்,
தூய நல்லுணர்வுகளைத் தூண்டிவிடல் சாத்தியமோ?
அரற்றுகின்ற கனவுகளின் அயர்வறியா வீணரிடம்
ஆதாரநிழல் தேடல் அனைத்தும் அசாத்தியமே!

—பாரதிகிருஷ்ணா

தகழி சிவசங்கரப்பிள்ளை சாதனை

தகழி சிவசங்கரம்பிள்ளை ஒரு நாவலை எழுதப் பத்துநாட்களுக்குமேல் எடுப்பதல்லை. 'பெண்' என்ற நாவலை ஏழு நாட்களில் எழுதினார். திரைப்படமாக வெளிவந்த 'செம்மீன்' என்ற நாவலையும் ஏழு நாட்களிலே தான் எழுதினார். அதுமட்டுமல்ல பெரும்பாலும் அவர் எழுதிய நாவலை அவர் திருப்பி வாசிப்பதோ திருத்துவதோ இல்லை. ஒரே முறையில் தரமாக எழுதிவிடுவார்.

உச்சி மாகாளியின் உக்கிரம் தனக்குள் வந்து புகுந்துகொண்டது போன்ற உணர்வு திடீரென்று மேலிட்டது.

''ஓகோ! தான் இப்பிடியெண்டதாலைதான் என்னையும் சிவப்புக் கண்ணாடிக்குள்ளாலை பார்த்தாரோ!''

அவளுக்கு அந்த ஒரு கணத்தில் எல்லாமே புரிந்ததுபோலுமிருந்தது. ஒன்றுமே புரியாதது போலுமிருந்தது.

கலைந்திருந்த தலையைத் தூக்கி முடிந்து கொண்டு, சேலையை உதறிக்கொண்டு எழுந்தாள்.

'ஒருவனுச்கு ஒருத்தி எண்டு வாழ்றதுதான் தமிழன்ரை பாரம்பரியப் பண்பு ஒரு குடும்பத்திலையாவது அந்தப் பண்பைக் காப்பாத்திறது தான் நான், தமிழ் மண்ணுக்குச் செய்யிற சேவை இண்டைக்க இரண்டிலை ஒண்டு பாத்திட்டு வாறன்...''

(8ம் பக்கம் பார்க்க)

பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபாவின்

பகவான் ஸ்ரீசத்யசாயிபாவின் அறுபத்தோராவது பிறந்த நாள் 23-11-1986 இந்த நன்னாளை உலகெங்கணும் பக்தர்கள் கொண்டாடுகிறார்கள்.

சொல்லும் செயலும் போதனையும் சாதனையும் இணைந்த பகவானின் தெய்வீகத்தொண்டு வாழ்க்கை ஆகில உலகிற்கும் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது.

பலகோடி மனித மனங்களை மாசு நீக்கி ஒளி வீசும் விளக்குகளாக மாற்றுவதற்கு அருளாளராம் பாபா பல்வேறு கால கட்டங்களில் நல்கிய நலந்தரும் அறவுரைகள் சில தொகுத்தளிக்கப்படுகின்றன.

அவதார புருஷரின் அறவுரைகள்

''பிரபஞ்ச முழுவதிலும் நிறைந்து நிற்பதும், அன்பு, சேவை, தியாகம் ஆகியவைகளின் மூலமாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளுவதுமான அந்த ஏதோ ஒன்றுதான் கடவுள்''

பகவானின் செய்தி

''நான் கொண்டிருக்கும் சமத்துவத்தை சலனமற்ற பேரமைதியை, பிரேமையை, பொறுமையை, தெய்வீக பேரானந்த நிலையைப் பெருக்கிக்கொள்ளமுயலாமல் என்னை மட்டும் வணங்குவதால், என் நாமத்தை மட்டும் ஓதுவதால் யாது பயன்? உங்களில் அநேகம் பேர்கள் நான் ஏதாவது செய்தியை அளிக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். என் வாழ்க்கை முறையே நான் உங்களுக்கு அளிக்கும் செய்தி. இச்சையற்றநிலை, துணிவு, நம்பிக்கை, துன்புறுபவர்களுக்குத் தொண்டு செய்வதில் ஆர்வம் ஆகியவைகளை வெளிப்படுத்தி வாழ்வீர்களானால் அதுதான் நான் அளிக்கும் செய்தியின்படி வாழும்முறை''

''நான் உங்களோடு பழகுவதால் உங்களைப் போலவே உண்பதால், உங்களோடு பேசுவதால் இது ஒரு மானிட உருவமே என்ற மாயையில் நீங்கள் மூழ்கிக்கிடக்கிறீர்கள். நானும்கூட உங்களோடு ஆடிப்பாடி, சேர்ந்து பணிபுரிந்து, உங்களை மாயையில் ஆழ்த்துகிறேன். ஆனால் எந்த வினாடியிலும் என்தெய்வீகத் தன்மை உங்களுக்கு வெளிப்படுத்தப்படலாம். அதற்கு நீங்கள் எப்பொழுதும் தயாராக இருக்கவேண்டும். தெய்வீகம் மானிடத் தன்மையால் குழப்பப்பட்டிருக்கிறது. உங்கள் கண்களை மறைக்கும் திரையான மாயையை வெற்றிகொள்ள நீங்கள் உழைக்க வேண்டும்''

இந்த அவதாரத்தின் மகிமை

''உங்களுடைய கவனத்தை மற்றுமொரு விஷயத்தை நோக்கியும் ஈர்க்க விரும்புகிறேன். கடந்த காலத்தில், அவதாரங்கள் தோன்றிய காலங்களில், அவதார புருஷர் உலகைவிட்டு மறையும் வரை அவரை அறிந்து கொள்ளுவதால் பெறும் பேரானந்தம் மக்களுக்கு அளிக்கப்படவில்லை. மேலும் அந்த அவதாரங்கள் வாழ்ந்த காலங்களில்கூட, அவதாரங்களின் அதிமானுட சக்தி, திறமை ஆகியவைகளால் ஏற்பட்ட பயமும், பீதியுமே பக்தியையும் விசுவாசத்தையும் தூண்டின அல்லது அவர்களின் அரச பதவி, தண்டிக்கும் உரிமை ஆகியவைகளால் பக்தியும் விசுவாசமும் ஏற்பட்டன என்றும்கூடக் கூறலாம். இந்த சத்யசாயி அவதாரத்தைப் பற்றி சிறிது சிந்தித்துப் பாருங்கள். பொருளியல் உலகின்மேல் கொண்ட மோகம் பொங்கியெழும் காலத்தில், பயபக்தி குறைந்துள்ள காலத்தில், உலகம் முழுவதிலுமுள்ள கோடிக் கணக்கான மக்கள் இந்த அவதாரத்தை ஆராதிப்பதற்கு என்ன காரணம்? இந்த மனித வடிவில் நிறைந்துள்ள மண்ணுலகைக் கடந்த தெய்வீகமே இதற்கான அடிப்படைக் காரணம்.''

உண்மை வெல்லும்

''வேதங்களில் கூறப்பட்டுள்ள பிரபஞ்சப் பிரேமையின் பராமரிப்போடு கூடிய பாதுகாப்பின்கீழ் உலகமக்கள் அனைவரையும் ஒன்றுசேர்க்கமுயற்சி செய்திருக்கிறேன். ஏனெனில் இந்த உலகம் என் அரண்மனை. ஒவ்வொரு கண்டமும் இந்த அரண்மனையில் ஒரு கூடம். 'பொய்மை தோல்வியுறும்; உண்மை வெல்லும்; ஒழுக்கம் அரசோச்சும், அதிகாரத்தை அளிப்பது நன்னடத்தையே தவிர, அறிவு, கற்பனைத்திறன். செல்வம் ஆகியவைஅல்ல; என்று மனித வரலாற்றின் ஏட்டில் பொன் எழுத்தால் புதிய அத்தியாயத்தில் எழுத வந்திருக்கிறேன். உலக நாடுகளின் ஆலோசனைச்சபையில் ஞானம் அரசுகட்டில் ஏறும். எனவே வழிதவறிச் செல்லாதீர்கள்.

உன்னத நோக்கம்

''அற்புத சக்திகளைக் காட்டி மக்களை வாயடைத்து நிற்கச் செய்வது என நோக்கமல்ல. உண்மையான ஆன்மிக முயற்சிக்குப் பரிசாக மங்கலத்தையும் பேரின்பத்தையும் அளிக்கும் ஆசிகளை அருளுவதும், மக்கள் குலத்தை மீட்சி, ஒளி, பிரேமை ஆகியவைகளை நோக்கி இட்டுச் செல்வதுதான் என் நோக்கம்.''

பிரபஞ்சத்தின் ஒருமைப்பாடு

''ஒரே இரத்தம் உடலின் பல பாகங்களுக்கும், எல்லா அவயவங்களுக்கும் ஓடி, அவைகளைப் போஷிப்பதுபோல, ஒரே தெய்வீக தத்துவம்தான் பிரபஞ்சம் முழுவதையும் இயக்குகிறது. வாழ்க்கை என்னும் களைப்பை உண்டு பண்ணும் குழப்பத்தில் மூழ்கி இறைவனை அசட்டை செய்யாதே. தனிமனிதரின் வித்தியாசங்களுக்கு முக்கியத்துவம் அளிக்காதே. சகல உயிர்ப்பொருள்களும் ஒன்றோடொன்று உறவு கொண்டவை தொடர்பு கொண்டவை என்பதை மனதில் பதிய வைத்துக்கொள். மணிகளின் மேல் கவனத்தைச் செலுத்தாமல், அவைகளை இணைக்கும் நிலையான, என்றென்றைக்கும் உள்ளதான சரட்டில் கவனம் செலுத்து'' என்று கூறுகிறார் பகவான் ஸ்ரீசத்ய சாயிபாபா.

சிறப்பு மிக்க செயற்குழுக்கள்

சாயி யுகமான இந்தக்கால கட்டத்தில், புதுமையான சாயி கருத்துக்களைப் போதிக்கும் புதிய கல்விக் கழகமாக ஏற்பட்டுள்ளன பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா குழுக்கள். ''இந்த அமைப்புகள் அன்பை விசாலமாக்கவும் உன் செயல்களை பக்திபூர்வமான சேவை மூலமாக வெளிப்படுத்தவும் உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும். பக்தியைப் பறை சாற்றவும், பக்தர்களைத் திரட்டவும் ஒரு புதிய மார்க்கத்திற்கு உதவி திரட்டவும் ஏற்படுத்தப்பட்டதல்ல. தமது உண்மைத் தன்மையை உணர்ந்துகொண்டு, அதனோடு ஒன்றறக் கலந்துவிட மக்களுக்கு உதவும் சிறப்புமிக்க செயலுக்கு சமர்ப்பணமாக இந்தக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன'' எனப் பகர்கிறார் பகவான்.

கல்வியின் பயன் என்ன?

''வித்யா ததாதி வினயம்'' கல்வி மனிதனிடம் பணிவை ஏற்படுத்தவேண்டும். அறிவாளிகள் தாம் எதையும் அறிந்துகொள்ளவில்லை என்று பணிவு கொள்ளுகிறார்கள். மூடன் தான் எல்லாவற்றையும் அறிந்து கொண்டுவிட்டதாகக் கர்வம் கொள்கிறான். பணிவும், கௌரவிக்கும் பண்பும்தான் கல்வியின் சரியான உண்மையான கனிகள். இன்றைக்கு பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் அடிபட்டு வீழ்வது இந்த மரியாதை செலுத்தும் பண்புதான். இதைப் பற்றிக் கூறும்போது, 'கீதையின் உறுதி மொழி ஒன்றைக் கூறுகிறார் பாபா. ''பண்டிதாஹ சமதர்சனஹ'' பண்டிதர்கள் ஒற்றுமையைக் காண்பவர்கள். அவர்கள் பிரிவினையை வளர்க்க மாட்டார்கள். வெறுப்பைத் தூண்ட மாட்டார்கள். எதை அறிந்து கொண்டால் எல்லாவற்றையும் அறிந்ததாகுமோ அந்த ஒன்றைத்தான் நாடுவார்கள். ஒற்றுமையைத்தான் தேடுவார்கதளயன்றி, போராட்டத்தைத் தேடமாட்டார்கள்.''

''நிலத்தைப் பண்படுத்தல் வாழ்க்கையின் பொருட்டாகும். ஆன்மிகப் பண்பாடு வாழ்க்கையின் வெற்றிக்காகவே. எந்த ஒன்று சரணாலயமாக, நெருங்கிய உறவினராக, வழிகாட்டியாக, காவலனாக இருக்கின்றதோ அந்த முழுமுதற் பொருளை நெருங்க விடாமல், அதிலிருந்து வெகு தொலைவுக்குக் கொண்டு செல்லும் கல்விமுறை, ஒளியைப் பெற விழைபவர்களைக் குருடாக்கும் முயற்சியில், குருடர்கள் ஈடுபடுவது போன்றதாகும்.''

ஆன்மிகப் பண்பாட்டின் அரண் பெண்மை

ஆன்மிகப் பண்பாட்டின் அரண்கள் பெண்களே. ஆனால் இன்றைய படித்த பெண்களின் நிலையும், நடத்தையும் அவர்கள் இழிவான கவர்ச்சிகளுக்கும், மலிவான மட்டரகமான நூல்களுக்கும், புலன்களைக் கிளர்ந்தெழச் செய்யும் கேவலமான திரைப்படங்களுக்கும் அடிமைப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றன.

ஐந்து அன்னைகள்

ஒவ்வொரு குழந்தைக்கும் ஐந்து அன்னைகள் உண்டு. வாழ்க்கையைப் பயனுடையதாக்கும் பொருளுடையதாக்கும் இந்த ஐவருக்கும் அடிபணிய, பக்தி செலுத்த ஒவ்வொரு குழந்தையும் கடமைப்பட்டிருக்கிறது. தேகமாதா [உடலைஅளித்தவர்]கோமாதா [பாலைப் பொழிந்து தரும் பசு வயலில் உழைத்து, வாழ்க்கை முழுவதற்கும் உணவளிக்கும் எருது], பூமாதா [விதைத்த விதைகளை நூறு மடங்காகத் திருப்பித்தரும் நிலம்] தேச மாதா [வாழ்க்கை முறை, சிந்தனை, உயர்ந்த கொள்கைகள், குறிக்கோள்கள் ஆகியவைகளை மதிப்பிக்கும், வாழ்ந்து வரும் நாடு], வேத மாதா [ஆன்மிகச் செல்வங்களை அள்ளி வழங்கும் வேதங்கள்] ஆகிய இந்த ஐந்து பேரும் தான் அந்த அன்னைமார்கள். இதில் முதல் தாயான தேக மாதா தன் குழந்தைக்கு மற்ற நான்கு தாய்மார்களின் சிறப்பினைத் தெளிவாக்கும் பொறுப்பினை வகிக்கவேண்டும். அதனால் தேகமாதாவின் பதவி மிகவும் கடினமானது. அவள் அனைத்துக்கும் அச்சாணி போன்றவள். எதனை வலிவுடையதாக்கி வெற்றிபெறச் செய்ய வந்துள்ளேனோ அந்த தர்மத்தை, சர்வ வியாபகமான சனாதன தர்மத்தை உயர்த்துவதற்காகவே கல்விப் பணியில் முதற்படியாக நான் பெண்கள் கல்லூரியை தொடங்க முடிவு செய்தேன்'' என்றார் பாபா.

தாய்நாட்டைக் காத்தல்

''தாய்நாட்டைக் காப்பதென்பது உயர்ந்ததொரு

(8ம் பக்கம் பார்க்க)

தொகுப்பு:
கரவை கிழார்.



**''நீ என்னை நோக்கி ஓரடிவைத்தால்
நான் உன்னை நோக்கி
நூறு அடிகள் வருவேன்''**

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா ஜயந்திதின விழா நிகழ்ச்சிகள்

30-11-86ல் யாழ். மாவட்டத்திலிருக்கும் எல்லா சத்திய சாயிசேவா நிறுவனங்களும் ஒருங்கிணைந்து பொது மக்களின் வசதிக்காக யாழ். பல்கலைக்கழகத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ சத்திய சாயிசேவா சமித்தி மண்டபத்தில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.45 மணிவரை பெருவிழாவொன்று நடத்துகின்றனர்.

இவ்விழாவின் முக்கிய அம்சங்கள்:

- சிறுவர்களுக்கான மனித மேம்பாட்டுக் கல்வி அறிமுகப் பொருட்காட்சி
- வீடியோ படக்காட்சி
- கலைநிகழ்ச்சிகள்
- சொற்பொழிவுகள்
- பஜனை
- நூல் விற்பனை

பாபாவைப் பற்றியும், அவருடைய சமதர்மபோதனைகளைப் பற்றியும் மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டத்தைப் பற்றியும் அறியவிரும்புவோர்களை யாழ்.மாவட்ட சத்திய சாயி சேவா நிலையங்கள் அழைக்கின்றன.

சத்திய சாயி சேவா நிறுவனங்கள்

இந்தியாவிலும், 45 வெளிநாடுகளிலும் 1600 சத்திய சாயி சேவா நிறுவனங்கள் வரையில் இயங்குகின்றன.

இலங்கையில் கொழும்பு, கண்டி, மாத்தளை, நுவரெலியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் 24 சத்திய சாயி சேவா நிறுவனங்கள் இயங்குகின்றன. சிலவற்றுக்கு கிளைகளும் உண்டு.

ஒரு சத்தியசாயி சேவா நிலையத்தின் முக்கிய அம்சங்களாவன:

1. கல்வி வட்டம்
2. 'மஹில விபாக்' அல்லது பெண்கள் பகுதி
3. சேவா தளம் அல்லது சேவைப்பகுதி
4. 'பால விகாஸ்' அல்லது சிறுவர்களுக்கு மனித மேம்பாட்டுக் கல்வி
5. பஜனை

ன் 61வது ஜயந்தி விழா சிறப்பு மலர்

பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபாவின் அவதாரம்

செ. ஞானசேகரம்

நான், நீ, அவன், அது, எனது, உனது, என்செயல், உன்செயல் என்று பயிலும் இந்த உலகம் உண்மையில் யாது? நாமமும் ரூபமுமாகக் காணப்படும் பார்முதற்பூதம் பரமாகிய இறைவனே! பரத்துள் மறைந்தது பார்முதற்பூதம். இந்தப் பிரபஞ்சத்தின் உண்மையென்ன?— இறைவனே ஒன்றான இறைவனே பலவாக நம் அறியாமையில் தோன்றுகின்றது. இங்கே நடக்கும் ஒவ்வொரு இயக்கமும் பரம்பொருளின் இயக்கமே. இங்குள்ளதெல்லாம் பரம்பொருளின் திவ்ய ஸ்வரூபமே. நாமெல்லாம் உண்மையில் சிவமே. இந்தத் தோன்றி மறையும் தோற்றமல்ல. நம்முடைய உண்மை இயல்பு சத்— [என்றுமுள்ள தன்மை]சித்-[பேரறிவு] ஆனந்தம்-[அந்தமில்லா ஆனந்தம்].

இந்த உண்மையை அறிவுறுத்தி, நம் நிலையற்ற தேகத்தை 'நான்' என்று கருதி, கவலை, பயம், துக்கம், சோகம், மரணம் ஆகிய துன்பங்களில் மாழும், தேகத்தை ஆத்மா என்று கருதும் தேகாத்ம புத்தியினின்று நம்மை விடுவித்து இறைவனே நாம், இந்த உருவமல்ல, என்று தெளிவித்து, பயம், கவலை, சோகம், மரணம் ஆகியவற்றிலும் நின்று நம்மை விடுவித்து, பிரம்மமே நான் என்று கருதும் பிரம்மாத்ம புத்தியை எம்மிடத்தே வளர்க்கவே வந்திருக்கிறார் பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா.

அவதாரத்தின்தொனி அதிகாரத்தொனி; அகங்காரத் தொனியல்ல. மெய்நிலையிலுள்ளவரின் பேச்சு ''நீங்களும் கடவுளே. என்னை நான் அறிவேன். நீங்கள் என்னையும் அறியமாட்டீர்கள். உங்களையும் அறியமாட்டீர்கள். உங்களை உங்கள் ஸ்வயமான தெய்வநிலையில் நிறுத்தவே நான் வந்திருக்கிறேன். என்னை நோக்கிஓரடிவைத்தால், நான் உன்னை நோக்கி நூறு அடிகள் வருவேன்'' என்கிறார் பாபா.

ஆனந்த நித்ய வாழ்வு

'சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்டான்', 'அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்' என்கிறார் மாணிக்கவாசகஸ் வாமிகள். முன் தான்வகித்த மந்திரிப் பதவியை 'மூர்க்கர்' காரியம் என்று இகழ்ந்து தான் சிவமாய், நித்ய ஆனந்தமாய், அழியா நிலையைப் பெற்ற தகுதியை எண்ணி ''யார் பெறுவார் அச்சோவே'' என்கிறார். இந்த அந்தமில்லா ஆனந்த நித்ய வாழ்வு ஒவ்வொரு மனிதனுடைய பிறப்புரிமையாகும். இதைமக்களுக்கு அளிக்க வந்த ''அவதாரமான பாபா, மக்களுக்கு உரை நிகழ்த்தும் போதெல்லாம் அவர்களுடைய உண்மை நிலையை நோக்கி 'ப்ரேமை ஸ்வரூபிகளே! திவ்ய ஆத்ம ஸ்வரூபிகளே! பவித்ரஆனந்த ஸ்வரூபிகளே!' என்று விழித்துத் தன் உரையைத் தொடங்குவார். ''ஆயிரம் ஆண்டுகள் ஆயிரம் மக்கள் முயன்றாலும் என்னை அறிந்துகொள்ள முடியாது ஆயினும் எவன் தன்னை அறிவானோ. அவனே என் உண்மையை ஓரளவு அறிவான்'' என்கிறார் பாபா.

சாதனை முறை

''நான் தனி ஒருவருக்கு விசேஷமான உபதேசம் செய்பவனல்ல. எல்லோருக்கும் நான் குரு. அவதாரத்தின் வாக்கு எல்லோருக்கும் உபதேசமே'' என்கிறார் பாபா. ''நான் கடவுள். நான் கடவுளுக்கு வேறல்லன். நான் இந்த அகண்ட பரப் பிரம்மம். நான் சத்-சித்-ஆனந்தம். பயமும் கவலையும் என்னை அணுகா- இப்படி உனக்கு நீ சொல்லிவா. இந்த உண்மை உன்னிடம் வலுப்பட்டு வரட்டும். மெல்ல மெல்ல நீ இறைவனே ஆவாய்'' என்று ஒரு சாதனை முறையையும் மக்களுக்குக் கொடுத்திருக்கிறார் பாபா.

'அவதாரங்களுடைய மகிமை அவர்களைஅணுகியவர்களுக்கே தெரியும். ஒரு சத்குரு ஓரிரு முமுட்சுக்களுடைய விடுதலைக்கு உதவக்கூடும். ஆயின் அவதாரமோ கணற்கற்ற மக்களைத் தீய தன்மையிலிருந்து விடுபடவும் விடுதலையை நோக்கி விரையவும் அடையவும் செய்கிறது குருவை, விடுதலைபெற்ற சிஷ்யன் சாட்சாத் இறைவனாகவே கருதுகிறான். 'இருவருந்தேடிக்காணா இறைவன் என்போல் உருத்தாங்கி... நல்லையில் வந்தான் மானையும் மழுவையும் விட்டுப் பூமியில் வந்தான்' என்று, எல்லோரும் வெறும் விசரனென்று எண்ணிய தன் குரு செல்லப்பாவை, இறைவன் என்றே பாடுகிறார். 'என்னை விட இறைவன் வேறில்லை', அங்கும் இங்கும் எங்கும் நான்'' என்று தான் அடைந்த தெய்வநிலையை விளம்புகிறார் ஸ்ரீ யோகர் சுவாமிகள்.

மனிதனின் பிறப்புரிமை

உண்மையில் நாம் தெய்வ ஸ்வரூபமே. நாம் இந்த உடம்பல்ல, மனமல்ல, புத்தியல்ல, சித்தமுமல்ல. நாம் நித்திய ஆனந்தப்பொருளான ஆன்மாவாய் இருக்கிறோம். மாறாத ஆனந்தமும் பரமசாந்தியும் ஒவ்வொரு மனிதனினதும் பிறப்புரிமையாயிருக்க, தாம் பயம், கவலை, விரக்தி, சோகம் மரணம் ஆகிய துன்பங்களில் உழன்று உலகத்தையும் சோகமாக்கும் மக்கள் சமூகத்தை விடுதலையாகிய தெய்வநிலைக்குத் திருப்பச் சங்கற்பஞ்செய்து கொண்டு வந்தவதரித்திருக்கிறார் பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபா. 'எப்பொழுது தர்மம் குன்றி அதர்மம் மேலோங்குகிறதோ, அப்பொழுது நான் உடல் எடுக்கிறேன்' என்கிறார் கிருஷ்ணபரமாத்மா. அவதாரமாய் வந்த ஞானசம்பந்த ஸ்வாமிகள் சிறுவயதினராயிருந்தபொழுதே தன் தெய்வத் தகைமையைச் சிறிது கோளறுபதிகத்தில் வெளிப்படுத்தும் வகையில் ''தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரை செய் திருக்கிறேன். ஆன சொன் மாலை ஓதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே' என்று மக்களுக்கு உறுதி தருகிறார். நாளையும் கோளையும் கட்டுப்படுத்த மனிதனால் முடியுமா? இறைவனால் மாத்திரமே முடியும். 'நஞ்சணி கண்டத்தர் தம் மகனார்' வானவ நாயகர் மகனார் அதாவது இறைவனின் புத்திரர் என்று சேக்கிழார் குறிப்பிடுவது கவனிக்கவேண்டியது. மனுஷ ரூபத்தில் தெய்வத்தத்துவம் இறங்கி வருவது பெருவாரி மக்களைப் பிறவிப் பிணியறுத்து விடுதலை பெற உதவவே. அவதாரங்களுக்கு இயற்கை பணிகிறது. அவர்கள் அற்புதங்கள் செய்வது தம்பாலும் இறைவன்பாலும் மக்களிடம் நம்பிக்கை ஏற்படச் செய்யவே.

அவதார புருஷர்கள்

சாதாரண மக்களுக்கும் அவதாரத்திற்கும் உள்ள வித்தியாசத்தை பாபாவே விளக்குகிறார்.

''மானிடரும் மிருகவர்க்கங்களும் பார்த்தல், கேட்டல், மணத்தல், ருசித்தல், ஸ்பரிசித்தல் ஆகிய ஐந்து கலைகளைக் கொண்டன. மனிதருடன் அவதார புருஷர்களும் பகிர்ந்து கொள்ளும் இன்னும் நான்கு கலைகள்; மனசு, இருதயம், பகுத்துணர்வு, உள்ளுணர்வு என்பன. மிகுதி ஏழு கலைகளும் அவதார புருஷருக்கே பிரத்தியேகமானவை. அவை:

1. முயற்சிக்குரிய வெகுமதியாய் அருளும் சக்தி.

2. அனுக்கிரகம் அல்லது விசேட கிருபை (பெறுபவன் தகைமை, தகைமையின்மையை பொருட்படுத்தாது) செய்யும் சக்தி.

3. சமூகத்தில் புதியதோர் வாழ்க்கை முறையை உண்டாக்குவது. தனிமனிதனிடத்தே புதிய உணர்வு நிலைகளை உதிக்கச் செய்வது, புதிய பொருள்களைச் சிருஷ்டிப்பதாகிய சக்தி.

4. உள்ளூர நல்லவைகளுக்கு (ஆனால் பாதுகாப்பற்றவை) துணை செய்து போஷித்து வளர்க்கும் சக்தி.

5 தீமையை அழிக்கும் சக்தி.

6. முறையாக நினைத்தமாத்திரத்தே உடல் தாங்கியோ, ஆத்மிகமாயோ முன்னே தோன்றும் (அவதாரத்தின்) நாமமும் ரூபமும்.

7. பிரச்னைகளுக்செல்லாம் நிவிர்த்தி காணும் சக்தி.

சாயி இயக்கத்தின் குறிக்கோள்

சாதாரண மக்கள் கடவுளைக் கோவிலுக்குள் இருக்கும் விக்கிரகமாகவே கருதி வாழ்கிறார்கள். தான் வேறு கடவுள் வேறு என்றும் மக்களுக்குப் புறம்பாகவே கடவுள் உள்ளதாக எண்ணுகிறார்கள். பிறர் எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன என்று வாழ்கிறார்கள். 'பிற உருவத்திலிருப்பது நீயன்றி வேறல்ல' பிறருக்குத் தீங்கு செய்தால் அது உனக்குத் தீங்கு செய்வதாகும். பிறர் சேவை இல்லாத் தியானம் வழிபாடெல்லாம் நன்மை பயக்காது பிறரை இறைவனாகக் காண் உன்னையும் அங்ஙனமே என்கிறார் பாபா. மனிதனிடத்து இயல்பாகவுள்ள தெய்வீகத்தை மிளிரச் செய்வதே சாயி இயக்கத்தின் முக்கிய குறிக்கோளாகும். இந்த நோக்கத்தை அடையப் பல விதமான சாதனைகளை வகுத்திருக்கும் பகவான் சேவையில்லாமல் எந்தச் சாதனையும் சித்திக்காது என்று சேவைக்குப் பெருமுக்கியத்துவம் கொடுக்கிறார். பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா, சாயி இயக்கத்திற்கு விடுத்திருக்கும் சாசனத்தில் மேலே சொல்லியதே முக்கியமான அம்சமாவது. சாசனத்தில் சொல்லப்பட்ட பிற அம்சங்கள் சில பின்வருமாறு:

''பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் உதயம் அவரால் பிரகடனப்பட்டதின் பிரகாரம் சனாதன தர்மத்தை நிலைநாட்டுவதற்கே.

இந்த உலக நிறுவனம் சமயம், சாதி, நிற அல்லது கொள்கை அடிப்படையில் தனித்துவமானது எந்தப் பாகுபாடாவது ஏற்றுக்கொள்ளாததால் முழு மனித சமூகத்திற்குமாக ஸ்தாபிக்கப்பட்டதொரு ஆத்மிக நிறுவனமாகும்.

ஒருமைப்பாடு

சமயங்கள் யாவினதும் உண்மைகளில் ஒற்றுமை காண்பதற்காக எல்லாச் சமயங்களையும் சேர்ந்த மக்களை இந்த நிறுவனம் தன்னகத்துள் ஏற்றுக் கொள்கிறதாதலாலும் சனாதன தர்மங்களின் முழுமையை நிலைநாட்டி விருத்தி செய்யவும், பலதரப்பட்ட எண்ணங்களிடையே ஒருமைப்பாட்டை நிலைநிறுத்தவும்.....

பகவான் அருளிய நெறிக்கோவை

இந்தக் குறிக்கோள்களை அடைய பகவான் ஒரு ஒழுக்க நெறிக் கோவையைத் தந்திருக்கிறார். அதில் [1] எவருடனும் மிருதுவாகப் பேசுவது [2] புறங்கூறாதிருப்பது [3] இல்லாதவர்களுக்கு உணவளிக்கத் தினமும் சிறிதளவு தானியம் எடுத்து வைப்பது [4] ஆசைகளுக்கு வரம்பு வைப்பது ஆகியன சாயி அடியார்கள் அனுஷ்டிக்கவேண்டிய ஒழுக்கங்களிற் சிலவாகும்

கல்வித் திட்டம்

உலகத்தின் தீயபோக்கை மாற்றி, செய்வீக வாழ்வை உலகில் நிலைநாட்டச் சிறுவர்களுக்கான மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டத்தைத் தொடக்கி உலகெங்கும் இந்த ஆத்மிகக் கல்வியைப் பரப்பி வருகிறார். ஆறு வயதிலிருந்து பதினைந்து வயதுவரை உள்ள பிள்ளைகளை பயிற்சிபெற்ற சீலமுள்ள குருமார்கள் ஒரு கிழமையில் ஒரு மணித்தியாலமே பயிற்றுகிறார்கள். ஆயினும் இந்தப் பயிற்சியில் பதினைந்து வயது வரும்பொழுது ஆத்ம அறிவும், சீலமும் நிறைந்தவர்களாக அவர்கள் தகைமை பெற்று நாளடைவில் சான்றோர் என்ற இலட்சணம் கொள்ளக்கூடிய பிரஜையாய் தான் வகிக்கும் எந்த ஸ்தானத்திலிருந்தாலும் மக்களுக்கு நல்வழியை வளாத்து நல்வாழ்வை மக்களிடையே தூண்டுபவர்களாகின்றனர். இச் சிறுவர்க்கான மனிதமேம்பாட்டுக்கல்வி, இந்தியாவின் பல மாநிலங்களாலும், வேறு சில தேசங்களாலும் ஆர்வத்துடன் ஏற்கப்பட்டு நடைமுறைக்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் பல பாகங்களிலும், வேறும் பல தேசங்களிலுமிருந்து சர்வகலாசாலை மாணவர்கள் 600 பேர் வரை வருஷா வருஷம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு வருஷமும் கோடைக்காலப் பயிற்சி முகாமொன்று முப்பது நாட்களுக்கு பகவானால் இம் மாணவர்களுக்கு நடாத்தப்படுகிறது. ஒவ்வொரு நாளும் பகவானும், பல தத்துவ நிபுணர்களும் இவர்களுக்கு உரை நிகழ்த்துவார்கள். தினமும் இவர்கள் தியானம், நகர சங்கீர்த்தனம் முடிந்தவுடன் சேரிகளில் தொண்டு செய்வது இதில் ஒரு அம்சமாகும்.

இந்தச் சிறுவர்க்கான கல்வித் திட்டத்தாலும் கோடைகாலப் பயிற்சியாலும் உலகத்தில் ஒரு சீலமும் ஞானமுமுள்ள பரம்பரையைவளர்த்து வந்து காலகதியில் உலகத்தின் தீயபோக்கையே மாற்றிவிட பாபா முனைகிறார்.

[8-ம் பக்கம் பார்க்க]

மலரை வாழ்த்துவோர்

ரி. தர்மாநந்தன்
167, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ரவிதா ஸ்டோர்ஸ்
(பழைய இரும்பு, போத்தல் வியாபாரம்)
875, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

ரஞ்சனாஸ்
17, 18, 18ஏ. நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

ஆர். வி. ஜி.
(பீடி விற்பனை நிலையம்)
275, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

ராணி ஜுவலர்ஸ்
[ஆர். ஜி கட்டிடம்]
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

லக்ஷ்மிநாதன்
தெல்லிப்பழை.

லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்
18, நவீன சந்தை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

மணியம்ஸ்
16, நவீன சந்கை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

நித்தியா ஸ்டோர்ஸ்
[மீன்பிடி உபகரண இறக்குமதியாளரும், விற்பனையாளரும்]
9, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சீமாட்டி
122, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சரஸ்வதி ஸ்டோர்ஸ்
[புடைவை வியாபாரம்]
55, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

கண்ணன் லொட்ஜ்
பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.

அண்ணா கோப்பி
4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

அபிராமி விலாஸ்
212, சேர் பொன்.
இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

யாழ்ப்பாணம்
ஜுவல் ஹவுஸ்
82/4 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்

நியூட்டன் எலக்ரிக்கல்ஸ்
(மின்சாரஉபகரண இறக்குமதியாளரும், விற்பனையாளரும்)
141, 143, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

அரஸ் ஐவுளியகம்
146, நவீன சந்தை,
மத்திய வீதி,
யாழ்ப்பாணம்.

ரி. குமாரசாமி
42, 44, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

கணேசன் ஸ்டோர்ஸ்
63, 78, கே. கே எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

அவதார புருஷரின்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

சேவையாகும். ஒவ்வொரு மாணுக்கனுடைய தலையாய கடமையும் அதுவேயாகும். சூழ்நிலை தன்னை எதிர்த்து நிற்கும்போது தன் கடமை எதுவென்றும், உடனடியாகத் தான் மேற்கொள்ளவேண்டிய சேவை எதுவென்றும் அறியவொணுத மாணுக்கன் தான் கற்ற கல்வியினுல் பயனுற்றவனுகான். கல்வி கற்றவனும் கல்வியைக் கற்பிப்பவனும் எளிமையான வாழ்க்கை வாழவேண்டும். அவர்கள் ஆடம்பர வாழ்க்கையைப் பின்பற்றினுல் அவர்களுடைய உண்மையான இயற்கைத் தன்மையையும் தனிப்பெருங் குணங்களையும் இழக்க நேரிடும். மாணுக்கர்கள் இதனை நன்குணரவேண்டும். ஒருவன் மாபெரும் விஞ்ஞானியானுலும் சரி அல்லது அறிவாளியானுலும் சரி, பிறரிடம் பழகும் போது அடக்கமும் கட்டுப்பாடும் இல்லையெனில் அவன் அறிவாளியாகவோ அல்லது அறிஞனுகவோ கருதப்படமாட்டான. அவ்வாருனவர்கள் சமுதாயத்தால் உயர்வாக மதிக்கப்படமாட்டார்கள்'' என 'வித்தியாவாஹினி, என்னும் நூலில் பாபா எழுதியுள்ளார். அவர் எழுதிய பிரேம வாஹினி, பிரசாந்திவாஹினி, தியான வாஹினி, தர்ம வாஹினி சந்தேக நிவாரணி, கீதாவாஹினி, பாகவத வாஹினி எனப்படும் புத்தகங்கள் ஆன்மீக ஒழுக்கத்தின் சிக்கல்களைப் பிரதது ஒளியைத் தரும் பொற்குவையாகும்.

கர்மம்– பக்தி ஞானம்

சரியாகப் புரிந்துகொண்டு பின்பற்ற வேண்டுமென்பதற்காக கர்மம், பக்தி, ஞானம் ஆகிய மூவகை வழிகளையும் ஒற்றுமைப்படுத்தி மிகத்தெளிவான வகையில் பின்வருமாறு விளக்கம் தருகிருர் பகவான். ''யாராவது உன்னிடம் உன் பெயர் என்ன என்று கேட்டால் நீ உன் உண்மைப் பெயரைக் கூறுவதில்லை. அதற்குப் பதிலாக வாழ்வில் மற்றத் தேகங்களிலிருந்து தனித்திருப்பதாக நீ எண்ணிக்கொண்டிருக்கும் உன் தேகத்திற்கு இங்குள்ள பெயரைக் கூறி ஏமாற்றுகிருய். பல பிறவிகளாக உன்னேடேயே இருக்கும் பல பிறப்பு இறப்புக்களிலிருந்து மீண்டும் வாழ்ந்திருக்கும் 'ஆத்மா' என்ற பெயரை நீ கூறுவதில்லை. மலம், விஷேபம், ஆவரணம் எனப்படும் மூன்று போர்வைகளால் அது மூடப்பட்டிருப்பதால் நீ அந்தப் பெயரை அசட்டை செய்கிருய். மலம் என்பது தீமை, கொடுமை, தீய நடத்தை ஆகியவைகளினுல் பெறப்படும் அழுக்கு. இது கர்ம மார்க்கத்தை அனுசரிப்பதால் நீக்கப்படுகிறது. அதுவாவது தன்னலமற்ற வினைகளை யாற்றி செருக்கு, ஆடம்பரம், செயலுக்கு உரிமை கொண்டாடுதல் ஆகியவைகளில் சிறுசாயல்கூட அவைகளின்மேல் படியவிடாமல் அவைகளின் பலனைப்பற்றியும் சிந்திக்காமல் வினையாற்றுவதாகும். இத்தகைய வினைகள் மூலமாகமலம் அகற்றப்படுகிறது.

அஞ்ஞானம்

இரண்டாவது போர்வை விஷேபம் அல்லது அஞ்ஞானம். உண்மையை மறைத்து புத்தியை மழுங்கச் செய்து, விசாரணையைக் குழப்பமடையச் செய்து கவர்ச்சிகரமான மின்னும் காக்கைப் பொன்னுல் மூடிமறைக்கிறது. இந்த நிலை பக்திமார்க்கத்தால் அகற்றப்படுகிறது. அதாவது எல்லாவற்றுக்கும் ஆதாரமான அனைத்தையும் பேணிப்பாதுகாக்கும் ஒன்றினை பரம் பொருளை உண்மையை, நலனை அழகை பிரேமைசாந்தி ஆனந்தம் ஆகியவைகளின் உருவத்தை எல்லாமாகவும் எல்லாவற்றுக்காகவும் உள்ள உண்மைப் பொருளை அனைத்தின்மூலமாகவும் கண்டு இடையருது தளர்ச்சியுருது வழிபடுவதன் மூலமாக அகற்றப்படுகிறது.

ஆவரணம்

மூன்ருவது போர்வை ஆவரணம். கயிற்றைப் பாம்பாகவும் பாலைவனத்தில் நண்பகலில் மின்னும் கானல் நீரை நீரூற்ருகவும் முத்துச் சிப்பியை வெள்ளியாகவும் எண்ணுவதைப்போன்று நிலையற்றதனை நிலையானதன் பேரில் ஏற்றிப் பார்ப்பதாகும். சர்வம் பிரம்மமயம் என்ற உண்மையின் மேல் (பிரபஞ்சத்தின் உண்மைத் தன்மை பிரம்மமே) நானுவித ரூபங்களையும், நிறங்களையும் நினைவைச் சிதறடிக்கும் மாறும் உலகினை ஏற்றிப் பார்ப்பது ஆவரணம். இந்தப் போர்வை ஞான மார்க்கத்தால் அகற்றப்படுகிறது. எங்கும் நிறைந்தது எல்லாமானது, எல்லாவற்றையும் காப்பது ஆத்மாவே என்ற ஞானத்தை அளுளி அந்தப் போர்வையை அகற்றுகிறது ஞானமார்க்கம். ஞானத்தின் ஒளியும் தெளிவும் பெற்றுஉண்மையை அனுபவபூர்வமாக உணர்ந்து மனிதன் விடுதலை பெறுகிருன். வியக்தி தத்துவம் என்ற தனித்தன்மையாகிய இருண்ட இரவில் அனுபவித்தகளைப்பு மிகுந்த நீண்ட பயணத்திலிருந்து மீண்டும் கற்ப கோடி காலத்திற்கு முன்தான் எதிலிருந்து பிரிந்து வந்தானே அந்தச் சத்தியத்தோடு இணைந்துவிடுகிருன் மனிதன்''

குன்றிலிருக்கும் பாறை கோவில் சிலையாகிறது

குன்றிலிருக்கும் பாறை கோவில் சிலையாகிறது. உளியும் சுத்தியும் அந்தப் பாறையினை அழகுமிக்க பொருளாக குன்ருத ஆனந்தமாக, வாழ்வினை நலமுடையதாக்கவும் தெய்வீகமாக்கவும் இடைவிடாத உற்சாகத்தை அளிக்கும் ஊற்ருக மாற்றுகிறது நீங்களும் கட்டுப்பாடான வ ழ்க்கை முறை என்னும்சுத்தியினுல் அடிபடவும் இன்ப துன்பம் எனப்படும் உளியினுல் செதுக்குப்படவும் உங்களை ஆட்படுத்திக்கொண்டால் தான் வெறும் பாறையாக இருக்காமல் இறைவனின் உண்மையான விக்கிரகமாக மாறமுடியுமென்று பாபா அழுத்தமாக கூறுகின்ருர்.

மனத்தூய்மை

''அதிகமாகப் பேசாதே. அதிகமான மனிதர்களிடமும் பேசிக்கொண்டிராதே. உன்னுடைய உண்மையான நண்பனும் தோழனும் இறைவனே. நீஉணர்ந்ததற்கொப்ப நடந்துகொள். ஏழை, பணக்காரன், நோயாளி, உடல் நலம்படைத்தவன் இவர்களுக்கிடையில் உனக்கு வித்தியாசம் தோன்றுமானுல் ஏழைக்கு நோயாளிக்கு உதவு மனதில் சேர்ந்த அழுக்கை பிரமையை அகந்தையை கொடுமையை புலன்களின் தழும்பை கர்மபலன்களின் முத்திரைகளை அகற்றுவதே டைமைன்ட் [Die-mind[அதாவது மனதை மறையச் செய்வதாகும். அவைகள் அகன்றபிறகு அங்கு மிகுந்து நிற்கும் உள்ளொளியால் எந்தளவுக்கு மனதைத் நூய்மையாக்குகின்ருயோ அந்தளவுக்கு மனம் மிகுந்த பிரகாசத்தையும் தெளிவையும் பெறுகின்றது. அப்பொழுது மனம் டைமண்ட் [Diamond] போல வைரத்தைப்போல பிரகாசத்தையும் பெறுகின்றது. அதாவது வைரத்தைச் செதுக்கிப் பட்டை தீட்டுவதன்மூலம் அதற்குப் பிரகாசமும் மதிப்பும் கூடுவதைப் போன்ற செயல் அது'' எனச் செப்புகிருர் அவதார புருஷராம் பகவான் சத்யசாயிபாபா.

போராட்ட முடிவு எப்போது?

''ஏழாண்டுப் போர், முப்பதாண்டுப்போர், நூற்ருண்டுப் போர் மனிதனுக்கும் மனிதனுக்குமிடையில் போர் ஜீவனுக்கும் மாயைக்குமிடையில் போர், தனிமனிதனுக்கும் பொருளியல் உலகுக்கும் போர் என நாம் கேள்விப்பட்ட இந்த போராட்டங்கள் கால ஓட்டத்தைத் தொடர்ந்து வருகின்றன. ஆதிகால மனிதன் அவைகளோடு சிக்குண்டிருந்தான். உலகத்தின் கடைசி மனிதனும் கூடப் போராடியே தீரவேண்டும். அருச்சுனனைப் போல இறைவனை உன் சாரதியாக ஏற்றுக்கொண்டு அவரிடம் புலன்கள், மனம், புத்தி. ஆசை ஆகிய அனைத்தையும் ஒப்படைக்காவிடில் இந்தப் போர் ஓயாது. வெற்றியைத் தராது. ஆன்மிகக் கல்வி உனக்கு இந்தப் பாடத்தைத் தான் கற்பிக்கிறது. மனிதக் குழந்தைகள் இந்தப் பாடத்தை அறிந்துகொள்ளும் உரிமை பெற்றவர்கள்'' எனக் கூறுகிருர் பாபா.

'சத்தியம் சிவம் சுந்தரம்' 'வித்தியா வாஹினி' ஆகிய நூல்களிலிருந்து தொகுக்கப்பெற்றவை.

பாபாவின் அவதாரம்

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

சாயி சர்வகலாசாலை

சாயி உயர் பாடசாலைகளில் சில சாயி சர்வகலாசாலையாக மாறிப் பெரும்புகழ் ஈட்டிவருகின்றன. இங்கேயுள்ள கல்வி மிக உயர்ந்த தரமுள்ளது. இங்கு மாணவர்களுடைய வழக்கமான பட்டதாரிப் பாடங்களின் புள்ளிகளைவிட, சேவை முதற்கொண்டு ஆத்ம வாழ்விற்கு வேண்டிய பாடங்களை இவர்கள் கற்று, அதன் புள்ளிகள் சில அடிப்படைப் பாடங்களின் மொத்தத்தோடு கூட்டப்படுகிறது. இன்னும் பல பாடங்களின் புள்ளிகள், பட்டதாரிப் பத்திரத்தில் குறிக்கப்பட்டும் இருக்கிறது. சாயி பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் அநேகர் சம்பளம் இல்லாமலே வேலைசெய்கிருர்களென்ருல் அங்கு பயிலும் மாணவர்கள் எத்தகைய பிரஜைகளாய் மாறுவார்கள் என்பது சொல்லவும் வேண்டுமா?

> **கல்வி அறிமுகப் பொருட்காட்சி**
>
> 30-11-86ல் நடைபெறவிருக்கும் சிறுவர்களுக்கான மனித மேம்பாட்டுக் கல்வி அறிமுகப் பொருட்காட்சி, பார்வையாளர்களின் வசதிக்காக, தொடர்ந்து 1-12-86 திங்கட்கிழமை பி. ப. 3 மணி தொடக்கம் 7 மணிவரைக்கும் நடைபெறும்.

இந்தக் கட்டுரையில் சாயியின் மகிமைகளைப் பேசுவது நோக்கமல்ல. அவைகளை அவரைப்பற்றிய அநேக புத்தகங்களில் வாசித்தறியலாம். எல்லோரையும் இக வாழ்விலும் வெற்றிபெறவும், பர வாழ்விலும் புகுத்தவல்ல ஒரு அவதாரம் யுகங்களிலும் கிடைத்தற்கரிய பெரும்பேறு. தாய் இருக்கிருள். எல்லாப் பயங்களிலும் நம்மைக் காப்பாள் என்ற நம்பிக்கையுடன் அஞ்சாமல் சலனமில்லாமல் விளையாடும் குழந்தையைப் போல் தனது சகல குறைபாடுகளையும் ஒப்புவித்துவிட்டு பரம சாந்தியுடன் வாழத் தக்க ஆத்ம வாழ்வு வாழ, அவதாரமான சாயி ஒரு தெப்பம் போன்றவர் என்ற உண்மை சாயியை அணுகியவர்கள் நன்றறிவர். இந்த அவதாரத்தின் உண்மையை அறிந்து பயன்படுத்துபவர் பாக்கியமுள்ளவர்கள்.

பாபாவின் சில கருத்துக்கள்

சேவை எத்தன்மையது

நீ என்ன சேவை செய்தாய் என்று இறைவன் உன்னிடம் கேட்டால், நீ என்ன பாவனையில் அதனைச் செய்தாய் என்றே அவர் உன்னிடம் கேட்பார். அதனைச் செய்ய உன்னைத் தூண்டியது என்ன? நீ உனது சேவையை நிறுத்துப் பார்க்கலாம். அதன் அளவைச் சொல்லிப் புகழலாம். ஆனுல் இறைவனே அதன் தரத்தையே தேடுவான். இருதயத்தின் தரத்தை, மனதின் பரிசுத்தத்தை, நோக்கத்தின் புனிதத்துவத்தையே அவன் தேடுகிருன்.

எது சேவை?

நீ இறைவனுக்குச் சேவை செய்கிருயோ அல்லது இறைவன் உன்னை உபசரிக்கிருனே என்று ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்பாயாக. இடுப்பளவு கங்கை நீரில் மூழ்கி இருந்துகொண்டு பக்தன் ஒருவன் தனது குவிந்த கரங்களில் கங்கை நீரை அள்ளி மந்திர உச்சாடனம் செய்தவாறு தன் இஷ்ட தெய்வத்திற்கு அர்க்கியமாக அந்நீரை ஊற்றுகிருன் உண்மையிலே அவன் செய்தது கங்கை நீரைக் கங்கையிலேயே விடுவதாகும் பசிப்பிணியுற்ற குழந்தைக்குப் பாலும் அல்லது குளிரில் நடுங்கும் சாலையோர சகோதரன் ஒருவனுக்குப் போர்வையும் கொடுப்பது இறைவனின் பரிசை இறைவனின் இன்னுமொரு பரிசின் கரங்களில் வைப்பதாகும். இறைவன் சேவை செய்கிருன் ஆனுல் நீ சேவை செய்ததாக உரிமை பாராட்ட உன்னை விடுகிருன்.

ஞானம் அரசோம்பும்

இறைவனிடம் இட்டுச் செல்லும் சனுதனப் பெருஞ்சாலையைத் திருத்தவே நான் வந்துள்ளேன். அவதார புருஷர்கள் வெற்றி தோல்வி காண்பதில்லை. அவர்கள் என்ன சங்கல்பிக்கிருர்களோ, அது நடந்தே தீரும். மேலும் மானிடரின் சரித்திரத்திலேபேபொன் அத்தியாயத்தை முத்திரை பொறிக்கவே நான் வந்துள்ளேன் அங்கே பொய்மை பொய்த்துவிடும். வாய்மை வெற்றி பெறும். அறம் அரசாளும் சீலம் சக்தி அளிக்கும். அது அறிவையோ, ஆக்க பூர்வ வலிவையோ ஐஸ்வரியத்தையோ வழங்காது. தேசங்களின் ஆலோசனைச் சபைகளில் ஞானம் அரசோம்பும்.

பாபா 24-3-71ல் டாக்டர் ஹிஸ்லொப் என்ற தன் பக்தருக்கு எழுதிய கடிதத்தில் ஒரு பகுதி:

எனது அன்புக்குரியவனே? எல்லாரும் எனது சகயாத்திரீகளே, சகபிராணிகளே— சகல உயிர்கள், தாவரங்கள், மிருகங்கள், ஏன், எனது பக்தர்கள் மாத்திரமல்ல, எமது மூர்க்க சகோதரர்கள், எமது தாவர சகோதரர்கள், நன்மை என்னும் சகோதரன், தீமை என்னும் சகோதரன், ஆத்மிக சகோதரன், தீய சகோதரன் எல்லோருமே அதே லட்சியத்தை நோக்கியே செல்கிருர்கள். எல்லோரும் அதே ஆற்ருேட்டத்திலேயே செல்கிருேம் ஒவ்வொருவரும் அந்த எல்லையற்ற விடுதலையை நோக்கி விரைகின்றனர். சகல லௌகிய தொடர்புடைய எண்ணங்கள் உலக சம்பந்தங்கள், உலக ஒட்டுறவுகள், உலக ஐஸ்வரியம், உலக ஆசைகள், உலக தேவைகள் எல்லாம் கரைந்து ஒன்ருய், இறைமயமாகி, சத்தியத்திடம் இட்டுச்செல்லும் அனுபூதிஉணர்வுகளின் க்ஷணங்களே.

●

இந்திய கௌரவ உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ஸ்ரீ பி. என். பகவதியின் கட்டுரையிலிருந்து:

பிரபஞ்சத்தைக் குறுகிய ஒரு கொள்ளிடத்திலடக்குவதும், பூமியின் சுற்றளவை ஒரு அடிமட்டத்தால் அளப்பதையும் ஒத்ததே பகவான் சத்ய சாயி பாபாவைப் பற்றி எழுத முற்படுவது எல்லையற்றதையும் அந்தமற்றதையும் எவ்வாறு எல்லையுற்றதும் அந்தமுள்ளதும் அளவிடமுடியும்.

இளமையிலேயே படியுங்கள்

வயதான பிறகுதான் வேதாந்த நூல்களைப் படிப்பது என்று வைத்துக் கொள்ளவேண்டாம். பார்வையும் அறிவுக் கூர்மையும் மழுங்கி உடலி சோர்வு கண்ட பிறகு ஆர்வம் இருக்காது. இளமைப்பருவமே அதற்கு மிகவும் உகந்தது.

வேதாந்த நூல்களை ஏராளமான அளவில் ஒரேசமயத்தில் படிக்க முடியாது. படிக்கவும் கூடாது பாலில் உறையிட்டுத் தயிராக்குவதைப் போலக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் படிக்க வேண்டும். ஒருநாளைக்கு ஐந்து முதல் பத்துப் பக்கங்கள் வரையில்தான் படிப்பது உசிதம்.

படித்துக்கொண்டே வரும் போது சந்தேகங்கள் உண்டாகும். அவை அடிப்படையான சந்தேகங்களாகவே இருக்கலாம். பரவாயில்லை. அவற்றைத் தனியாகக்குறித்துக்கொண்டு தொடர்ந்து படியுங்கள். உண்டான சந்தேகங்களைப் பற்றி மேலும் நினைத்துக் கொண்டிருக்கவேண்டாம். ஒரு வாரம் படித்து முடித்த பிறகு, அந்தக் குறிப்புக்களைப் புரட்டிப் பாருங்கள்! ஆச்சரியமாக இருக்கும். அவற்றில் அனேக சந்தேகங்களிற்கு உங்களுக்கே விடை இப்போது தெரிந்திருக்கும்.

இந்த ஒரு வாரத்தில் உங்களுடைய மன்ப்பார்வை விசாலமாக ஆகிவிட்டது. அறிவுக்கு ஆழம் கிடைத்துவிட்டது. புத்தகத்தைப் படித்து முடிக்கும்போது, அநேகமாக உங்கள் சந்தேகங்கள் அனைத்துமே தெளிந்து போயிருக்கும்.

இளமையிலேயே படியுங்கள். மெதுவாகப் படித்துப் புரிந்து கொள்ள அப்போது தான் நிறைய அவகாசம் இருக்கும் வயது ஆக ஆக உடலில் முதிர்ச்சி ஏற்படுவதைப் போல், உங்கள் மனமும் கனிந்து பக்குவமாகி விடும் வாழ்க்கையில் முழு வளர்ச்சிபெற இதுதான் வழி. இது ஒன்றுதான் வழி.

—ஸ்வாமி சின்மயானந்தர்

தொகுப்பு:- க. கனகராசா

சிறுகதை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறிக்கொண்டே சூனுவத்தைப் பக்கமாய் வேகமாய் நடந்தாள் பொன்னி.

கண்ணகி, பாண்டியன் மாளிகைக்கு நடந்த நடை இப்படித்தான் இருந்திருக்குமோ?

இவளது உக்கிரத்தைப் பார்த்துப் பயந்துபோன சின்னுத்தைக்கிழவி, பொல்லையும் ஊன்றிக்கொண்டு இவளுக்குப் பின்னுல் தடுமாறி நடந்து கெண்டு சொன்னுள்,

''சேறு கண்ட இடத்திலே மிதிச்சுத் தண்ணி கண்ட இடத்திலே கழுவிறதுதானடி ஆம்பிளையளின்ரை வழக்கம். அதைப் பெரிதுபடுத்தாதையடி. கேட்டியே? ஒருமாதிரிச் சமாளிக்கவேணுமடி..என்னடி சொல்லன்...''

''உனக்கு மட்டும் வந்த சிக்கலேயடி எல்லாருக்கும் வாறதுதான். எனக்கும் அந்த நாளையில் வந்ததுதான். மெய்யேடி சொல்லன்?''

''நான் கத்தக்கத்த ஒண்டும் பேசாமல் போருள். நாசமாய்ப் போனவள்.....''

பதில் சொல்லுசொல்லு என்று அவளை எதுவும் சொல்லவிடாமலே மூச்சு விடாமல் சொல்லிக்கொண்டு பின்னுல் வந்தாள் கிழவி.

''எணேய் நீ வீட்டை போணை நான் எல்லாம் சரிப்படுத்திக்கொண்டு வாறன்...''

கூறிக்கொண்டே தொடர்ந்து வேகமாய் நடந்தாள் பொன்னி,

அது வேடிக்கையான நடையாக இல்லாமல், விபரீதமான நடையாக இருந்தது.

[யாவும் கற்பனை]

அபாயச் சங்கொலியின் பின்

'எல்லோரும் மண்மூடை அரணுக்கு செல்லுங்கள்' என்றவர் பலி

மரணவிசாரணையில் சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி

"கரையில் கடை முதலாளி வரவை எதிர்பார்த்து யாழ் நவீன சந்தையில் இருந்த போது அபாயச் சங்கு ஒலி கேட்டது. எல்லோரும் 'மண் மூடை அரணுக்கு செல்லுங்கோ' என்று கூறிவிட்டு அரணுக்கு வெளியில் நின்ற போது. சுந்தரம் ஷெல் தாக்கியதால் பலியானார்.

'யாழ். கபே' தேநீர் தயாரிப்பாளரும், உடுபுசலாவையைச் சேர்ந்த ஐம்பதுகளிலுமான ஐ. சுந்தரத்தின் (32 வயது) மரண விசாரணையில் சாட்சியமளித்த கடை காசாளர் தோமஸ் விஜயகுமார் இவ்வாறு கூறினார்.

யாழ். பதில் நீதவான் க. கேசவன் நேற்று மரண விசாரணை நடத்தினார்.

அவர் மேலும் கூறியதாவது; பாதுகாப்பு கருதி கடைக்கு உள்ளே தங்காமல் வெளியே இருந்து வந்தோம் நேற்று அதிகாலை 4 மணிக்கு 'ஷெல்' வீழ்ந்து கடை முன் பக்கம் சேதமடைந்திருந்தது. காலை 7 மணிக்கு கடையைக் கழுவி விட்டுக் காலை உணவு அருந்தினோம் பின் கடையைப் பூட்டி விட்டு நவீன சந்தையில் முதலாளி வருகையை எதிர் பார்த்ததுக் காத்திருந்தோம். காலை எட்டரை மணியளவில் அபாயச் சங்கொலி கேட்டது! இருவரும் ஓடினோம்.

எல்லோரையும் மண் மூடை அரணுக்குச் செல்லுமாறு கூறியபடி இறந்தவரும் ஓடி வந்து அரணுக்கு வெளியே நின்றார்

யாழ். கோட்டையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' அரணுக்கு முன்னால் விழுந்து வெடித்து சிதறியது. பலத்த சத்தம் கேட்டது. இறுதி நேரத்தில் வந்து பார்த்த போது சுந்தரம் மூளை சிதறியபடி இறந்து கிடந்தார். மரணம் பற்றி கடை முதலாளிக்கு தெரிவித்தேன் இறந்தவர் ஒருவாரம்தான் கடையில் வேலை செய்தார். அவரின் விலாசம் தெரியாது

கருப்பையா ஜெயம் சாட்சியமளிக்கையில் இறந்தவர் உடுபுலாவையை சேர்ந்தவரென்றும், ஒரு வருடமாக தன்னுடன் வேலை பார்த்ததின் கடந்த வாரம் மனஸ்தாபத்தினால் விலகிச் சென்றாரென்றும், அவர் திருமணமாகாதவரென்றும், தந்தை இறந்து விட்டாரென்றும், தாய் மட்டும் இருப்பதாகவும் கூறினார்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

(க)

உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து உரும்பராய் விநாயகர்கோவில் முன்றலில் நேற்று அவ்வூர் மக்களால் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

தெல்லிப்பழை, காங்கேசன்துறையில்

உண்ணாவிரதமும் வழிமறிப்பும்

யாழ்ப்பாணம், சனி

யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் கடத்தப்பட்டமைக்கு கண்டித்து நடைபெற்று வரும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரி போன்ற பாடசாலைகளில் உண்ணாவிரதம் நடைபெற்றது.

இதேவேளை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் இப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நேற்று தெல்லிப்பழைச் சந்தியில் வழிமறிப்பு போராட்டம் ஒன்றையும் நடத்தினார்கள்

காலை 9மணி தொடக்கம் 11 மணிவரை நடைபெற்ற இந்த வழிமறிப்புப் போராட்டத்தினால் இப்பாதையூடாகச்சென்ற வாகனங்கள் சுமார் இருமணி நேரம் தாமதித்தே தமது பயணத்தைத் தொடர்ந்தன.

[நல்லூர் நிரு ஒ]

உங்கள் முன்னிலையில் மீண்டும்

தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கிறது

மண்ணைப் பொன்னாக்கித் தந்த
மறக்கமுடியாத
C. C. C. அக்றிகோலாஸ்
உரக் கலவைகள்!!

இலங்கையில் 75 ஆண்டுகளாக, நமது மண்ணில் பரிசோதனைகளை மேற்கொண்டு
C. C. C. உரக்கலவைகள் சிறந்த பசளையென
சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

அடிப்பசளை — வளமான பயிருக்கு

வலுவான CCC அடிப்பசளை
(CCC SPL. - BASEL MIX)

முதலாவது மேட்டுப்பசளை

(EXT. MAG - UREA)
எக்ஸ்ரா மாக்ஸ் யூரியா

மக்னீசியம் சத்து சேர்க்கப்பட்ட யூரியா

பயன்பாடுகள்:

யூரியாவின் கசிவுத்தன்மையைக் குறைக்கிறது
யூரியாவிலிருந்து நைதரசன் பயிருக்குக் கிடைக்குமுன் நைதரசன் விரையமாவதை கணிசமானளவு குறைக்கிறது.
மண்ணிலிருக்கும் மக்னீசியம் பற்றுக்குறையை நிவர்த்தி செய்கிறது.
(பயிர் மஞ்சள் நிறமாவதை தடுக்கிறது)
பயிரின் பசுமைத்தன்மையை அதக நாட்களுக்கு கொடுத்து விளைச்சலை அதிகரிக்கிறது.
மக்னீசியம் மண்ணில் தங்கி அடுத்த பயிருக்கு கிடைக்கின்றது.

இரண்டாவது மேட்டுப்பசளை

மேலும் விளைச்சலை அதிகரிக்க உதவுகிறது.
(CCC SPL. TDM)
சீ. சீ. சீ. அக்றிகோலாஸ் ஸ்பெஷல் ரி. டி எம்.

எந்தவொரு பயிருக்கும் விளைச்சலை அதிகரிக்க கந்தகச்சத்தும். மக்னீசியமும் கட்டாயம் தேவை.

அக்றிகோலாஸ்

173, கெய்சர் வீதி, கொழும்பு 11.

(A 2896

தொழில் முதலீட்டு வாய்ப்பு

உள்ளூர் மூலப் பொருட்களைக்கொண்டு தினசரிப் பாவனைக்குரிய உற்பத்திப் பொருளொன்றைத் தயாரிக்கும் நிறுவனம் தனது எதிர்காலத் திட்டங்களையொட்டி மேலதிக மூலதனத்தை நாடுகிறது. சந்தைப்படுத்தல்துறையில் ஈடுபாடும் அறிமுகங்களும் உள்ளவர்களுக்கு விசேடமாகக் கவர்ச்சியானது பின் வரும் முகவரியுடன் தொடர்புகொண்டு உரையாடலுக்காக நேரம் குறிக்கவும். விளம்பரதாரர் M 63, மே/ஸ dyn ads 476, பிரதான வீதி, சுன்டுக்குளி, யாழ்ப்பாணம் (சென்ற ஜோன்ஸ் கல்லூரிமுன்பாக)

A 2894

பிரயாண ஒழுங்கு

GLORIA TRAVELS
★ Switzerland
★ Germany ★ France

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்துதருவதுடன் எமது பிரயாண முகவர் உடன் அழைத்துச் செல்வார்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட், (BOND), விசா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

A 2870

பிரயாண ஒழுங்குகள்

★ சவுதிஅரேபியா: கிளீனேஸ். - வயது 25 முடிந்தவர்கள் மட்டும் உடன் பாஸ்போட், 25 படங்களுடன் நேரில் வரவும். (150 ஆட்கள் தேவை)

★ சவுதிஅரேபியா: ரெயிலர் றைவேஸ் - 25 வயது முடிந்தவர்கள் - 5 வருடத்துக்கு மேல் H V. லைசென்ஸ் உள்ளவர்கள் 10 ஆட்கள் தேவை.

★ டுபாய் கட்டிடப்பகுதி வேலையாட்கள் (Construction Labourers) - வயது: 18 — 30 வரை. (150 ஆட்கள் தேவை).

★ சிங்கப்பூர்: பணிப்பெண்கள்.

★ குவைத்: பணிப்பெண்கள்.

★ டுபாய்: பணிப்பெண்கள்.

பணிப்பெண்களாகப் போகவிரும்புபவர்கள் பாஸ்போட், 6 பாஸ்போட் படம், 1 போஸ்காட் சைஸ் முழு கலர் படத்துடன் நேரில் வரவும்.

டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்,
பிரசாந்தி வைத்தியநிலையம்,
கற்பகபிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

★ பி. கு. இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள ஒழுங்கையால் வரவும.

A 2895

பல். மாணவர் போராட்டம்

ஜனநாயகத்தைப் பாதுகாக்க நடத்தப்படுகிறது

— ஈ. பி. ஆர். எல். எவ்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"யாழ் பல்கலைக்கழக மாணவரின் போராட்டம் போராடும் மண்ணில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக நடத்தப்படுகிறதாகவே நாம் கருதுகிறோம். பல்கலைக்கழக மாணவர்களின் பல பிரசுரங்களும், அறிக்கைகளும், சாகும் வரை உண்ணாவிரதத்தில் பங்கு பற்று முன் மாணவர்கள் ஆற்றிய உரையும் ஐயத்திற்கு இடமின்றி இதை நிரூபித்துள்ளன. இதையிட்டு மக்கள் எவ்வகையிலும் குழம்ப வேண்டிய அவசியமில்லை" இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஈ பி ஆர். எல். எவ்] விடுத்த அறிக்கையின் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வீட்டிலிருந்த விஜிதரனைக் காணவில்லை கேட்டுப் பார்த்த இடங்களிலும் பதிலில்லை இந்நிலையில் போராடுவதைத் தவிர மாணவர்களுக்கு வேறு வழியில்லை. விஜிதரன் கடத்தப்பட்டானா? காணாமல் போனானா? என்ற சட்டவாதங்களுக்கு இங்கு இடமில்லை. விஜிதரன் கடத்தப்பட்டானோ, காணாமல் போனானோ தற்சமயம் அவன் இல்லை. விஜிதரன் சித்த சுவாதீனம் அற்றவனுமல்ல,

விஜிதரன் விவகாரம் வெறுமனே ஒரு மாணவன் சம்பந்தப்பட்ட பிரச்னையல்ல. இது மக்களின் உயிர் வாழும் உரிமை, பாதுகாப்புக்கான உத்தரவாதம், தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் போன்ற அடிப்படை ஜனநாயக உரிமைகளோடு அவை மீறப்படும் நடவடிக்கைகளோடு பின்னிப் பிணைந்துள்ள விடயமாகும்

அடிப்படை ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும் "அராஜகத்தின் ஆணிவேரை அறுத்தெறியவும், தம்மைச் சாகடிக்கவும் துணிந்துவிட்ட மாணவர்களோடு சீண்டி விளையாடுவது ஆபத்தானதாகும் நிறுவன மயப்பட்டிருக்கும் மாணவ சக்தி நெருப்புக்குச் சமன். விஜிதரன் கடத்தப்பட்டமையை கௌரவப் பிரச்னையாகக் கருதாது உடன் விடுதலை செய்ய சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் மாணவர்கள் தொடங்கியிருக்கும் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் சாதாரணமல்ல அதன் உறுதிப்பாடு மக்களை ஒரு உலுட்டு உலுப்பி விடத்தக்கது.

விஜிதரன் விடுதலை செய்யப்படுவதற்கு நிபந்தனை போடுவது மேலும் மேலும் மாணவர்களின் நடவடிக்கை தீவிரப்படவே வழி கோலும். எனவே விஜிதரன் விவகாரம் மாணவர்களைத் திருப்தி படுத்தும் வகையில் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். இது விடயத்தில் அனைத்து ஜனநாயக சக்திகளும் ஆக்கபூர்வமாக செயல்படல் வேண்டுமென வேண்டுகிறோம்.

அதிபர்கள் கூட்டம்

உடுவில், சனி

மானிப்பாய் வட்டாரபாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இராமநாதன் கல்லூரியில் மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சதனஞ்சயன் தலைமையில் இம்மாதம் 25-ம் திகதி காலை நடைபெறவுள்ளது.

யாழ் கல்வி திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. குசோமசுந்தரம் கல்வி அதிகாரி திரு. க மகேசன் திரு. வி யோசேப் ஆகியோர் கருத்துரைகள் வழங்குவர்.

8-வது ஆண்டு நினைவஞ்சலி

டாக்டர்
த அ. சுப்பிரமணியம்
[கணேசு]
அவர்கள்

தோற்றம்: 4-7-1917
மறைவு: 21-11-1978
திதி: 23-11-1986

பலருக்காய் வாழும் பண்பு சிலருக்கே உரியதன்று
சிலருக்குள் சில போலிந்த உலகிற்குள் வாழ்ந்தபின்னே
பலருக்கும் வியப்பைத் தந்து பாரினைவிட்டு நீங்கி
பலரையும் துயரிலாழ்த்தி மணிநாதன்தான் ஓய்ந்த தம்மா
இறைவன் திருவடியில் உங்கள் ஆன்மா கலந்திட
என்றும் வேண்டிநிற்கும்
அன்பு மனைவி மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
3 B, அரசினர் தொடர் மாடி வீடுகள்,
கொழும்பு - 4
கணேச பவனம்,
தாவடி தெற்கு,
கொக்குவில்

[C 5851]

31- ம் நாள் நினைவஞ்சலி



சைவப் புலவர்
திரு. சி. அருளம்பலம்
மண்ணில்: 31-03-1914
விண்ணில்: 24-10-1986

சைவாசார சீலரும், புராண விதிதகரும் எமது வாழ்வின் வழிகாட்டியாய் ஒளிர்ந்த எமது சிறிய தந்தையின் அந்தியேட்டிக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (23-11-1986) நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பெருமக்கள்,
தம்பாவத்தை,
மேலைப்புலோலி,
பருத்தித்துறை.

(C 5957)

வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரனைக் கடத்தியவர்கள் உடனடியாக அவரை விடுதலை செய்ய வேண்டுமென கொக்குவில் கிழக்கு பிரஜைகள்குழு அவசர வேண்டுகோள் விடுக்கின்றது.

இன்று ஐயந்தி தினம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பகவான் ஸ்ரீ சத்திஉசாயி பாடாவின் 61- து ஜெயந்தி தினம் நல்லூர் பகவான் ஸ்ரீசத்திஉசாயி இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இன்றைய நிகழ்ச்சி விபரம்:

அதிகாலை 4-45 மணிமுதல் 5-00 ஓங்காரம் சுப்பிரபாதம் 5-00 மணிமுதல் 6-00 நகர சங்கீர்த்தனம்.

பகல் 10-00 மணிமுதல் 10-15 கொடியேற்றம் 10-15 மணிமுதல் 11-00 பாதபூசை 11-00 மணிமுதல் 12-00 சஹஸ்ரநாம அர்ச்சனை

நண்பகல் 12 00 மணிமுதல் 2-00 மகேஸ்வர பூசை

பி பகல் 3-45 மணிமுதல் 4-45 வயலின் இசை 4-45 மணிமுதல் 6-30 பஜனை 6 30 மணிமுதல் 6-45 திருஊஞ்சல் 6 45 மணிமுதல் 7-00 மங்கள ஆராத்தி.

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

ஞாலக்கதிரொளி
அமரர் ஜோதி
சண்முகராசா
ராஜ்குமார்
(ஆசிரியர்)
பனிதஉரு: 23 - 9 - 1957
இறைவன்உரு:23-11 1984

ஆண்டு இரண்டாகி னமே உன் ஆசைமுகம் பார்த்து இரண்டாண்டு ஆகினவே உன் இனிய மொழி கேட்டு ஞாயிறெனத் தோன்றி நம்வாழ்வில் ஒளிவீசி அன்பைச் சொரிந்து நம் வாழ்வைச் சீராக்கி இம்மென்னும் கணப் பொழுதில் எம்மை விட்டுச் சென்று விட்டாய். காலமெல்லாம் எங்களைக் கண்ணீரில் ஆழ்த்திவிட்டு மாயமாய் மறைந்து விட்டாய். மனித உருநீக்கி பகவான் உனைவந்தழைத்தான் தன்பாதமலர் சேர்த்து விட்டான். அழியாவரம் பெற்று நீ இறைவன் உருபெற்று விட்டாய் ஞாலக்கதிரொளி யே! ஞான ஒளிவிளக்கே! உன்பாதத்திருமலரில் எம்கண்ணீராள் பூஜை செய்து போற்றிப் பகவானின் பொன்னடியை இறைஞ்சுகிறோம். துயர் ஆற்றுது கண்ணீர் மல்கும் தந்தை, தாய், தம்பிமார்கள், தங்கைமார்கள்.

கட்டபாலி லேன்,
ஆனைக்கோட்டை

C-5923

மலிவு விற்பனை

அலுமினிய பாத்திரங்களை விறிறுத் தீர்க்கும் மலிவு விற்பனை.

பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்
257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C5920

பிரயாண ஒழுங்கு

டுபாய் - கட்டடப்பகுதி வேலையாட்கள்
(Construction Labourers)
150 பேர்
அத்துடன்
பாஸ்போட், BOND, விசா ரிக்கற்றிங் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

யூனிவேர்சல் ஏஜென்சி
125 (455) ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[ஆயுர்வேதக கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக]
(A 2888]

ICMA

MAY 1987 EXAM
NEW SYLLABUS
AAT, IDPM, IAB,
JUNE 1987 EXAMS,
Weekend
Courses Commencing from
6 - 12 - 1986

விரிவுரையாளர் குழு:-
A. ஏரம்பு, K. ஜெயரட்ணம், S. கதிர்காமநாதன், S கைலாயபிள்ளை, யூஜின் மரியாம்பிள்ளை, கந்தையா நவரேந்திரன், S. P சிவபாதசுந்தரம் [R. N. வரேந்திரன்

Free of Charge

Application forms for registration with the respective examination bodies including guidance and assistance regarding selection of courses provided to students.
We were the leaders, still we are.

வகுப்புகள் பாதுகாப்பான இடத்தில்:
CANTABIA INSTITUTE
21, MAIN STREET, JAFFNA.
[Shoot of Oxonia Colombo]
[A-2871] Phone: 24201

NORTH CEYLONஇல் புதிதாக ஆரம்பமாகும் கணக்கியல் வகுப்புக்கள்

I. C. M. A.
STAGE I — 6-12-1986.
STAGE II — 6-12-1986.

A. A. T.
PRELIM — 6-12-1986.
INTER — 6-12-1986.
FINALS — 6-12-1986.

I. A. B.
FOUNDATION — 14-12-1986.
INTER — 14-12-1986.
FINALS — 14-12-1986.

I. D. P. M.
PART I — 14-12-1986.
PART II — 14-12-1986.

Chartered Licenciate
(August-1987) 14-12-1986.

உங்கள் பதிவுகளுக்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. PETERS LANE, JAFFNA. HOSPITAL ROAD,
[A-2856]

இணுவிலில் நாவலர் விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

இணுவில் அமிதாபாடசாலையில் நாளை 24ம் திகதி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணி மன்றத்தின் ஆதரவில் நாவலர் விழா நடைபெற உள்ளது.

திரு எஸ். சோதிப்பெருமாள் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் இராமநாதன் கல்லூரி அதிபர் திரு மதி. ஞா. சோமசுந்தரபகவுஞ்சுப. நோ. கூ. சதலைவர் திரு. கி. குமாரவேல் உட்பட பலர் சிறப்புரை வழங்குவர்.

நாவலர் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு உடுவில் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் பரிசுகளை வழங்குவார்.

31-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி
இராஜேஸ்வரி
தியாகராஜா

மலர்வு: 22-06-1934
உதிர்வு: 24-10-1986

எங்கள் பாசச் சுடரொளியே, எமது ஆருயிர் தெய்வமே, குன்றாத அறிவின் குன்றே, பொறுமையின் சிகரமே, பேரன்போடு பேணிக் காத்தவரே, அறிவுப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்த அருமைத் தாயே! உங்கள் பிரிவால் மீளாத் துயருற்றிருக்கும் நாங்கள் உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம், அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கணவன், பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள்.

18, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். C 5972

4வது வாரம்
வெலிங்டன்
திரையில்
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதிகா
கவுண்டமணி
கலைப்பெட்டி சிங்காரம்
நடித்த
நிலவு சுடுவதில்லை
(கலர்)

விடோ
FROM TO DAY
10-30, 2-30, 4-30, 6-30
NO BODY IS PERFECT
Attack And Action
[Color]

கணணிவெடி தாக்குதல் 5 இராணுவம் பலி

யாழ்ப்பாணம், ஞாயிறு.

சிலாவத்துறை இராணுவ முகாமிலிருந்து கடந்த வியாழக்கிழமை முருங்கன் முகாம் நோக்கி வந்த கொண்டிருந்த படையினர் மீது மக்கள் விடுதலைப்படையினர் (ஈ. பி.ஆர். எல். எவ்) மேற்கொண்ட கணணிவெடித் தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், இருவர் காயமடைந்துள்ளனரென ஈ. பி. ஆர். எல். எவ் விடுத்த அறிக்கையொன்றில் தெரிந்துள்ளது

மக்கள் விடுதலைப் படையினர் தரப்பில் எதுவித சேதமுமில்லை யென அவர்கள் அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளனர். (கே)

உதைபந்தாட்டம்:

இன்று இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன், 15 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

3-வது இடத்துக்காக ஒஸ்மானியாக் கல்லூரி எதிர் நடேஸ்வராக் கல்லூரியும், சாம்பியன் கிண்ணத்துக்கான போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் - கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதும். [வி.

ஆர்ப்பாட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று நாளை திங்கட்கிழமை காலை வாழ். பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

இவ்வூர்வலத்தில் அனைத்து தமிழ்பேசும் மக்களையும் கலந்துகொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர் அமைப்புக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. வா

நேற்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொன்னம்மாவும் நேற்றைய உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டார். திருமதி பொன்னம்மா தனது மகனுக்கருகில் சோகமே உருவாக இருக்கக் காணப்பட்டார்.

நேற்று நண்பகல் உண்ணாவிரதத்திற் கலந்து கொண்ட விமலேஸ்வரனின் தாயார் உணவு அருந்தும்படி பல்கலைக் கழக மாணவர்களால் கேட்கப்பட்டபோதும் அவர் உண்ண மறுத்து விட்டார்.

உண்ணாவிரதிகள் அனைவரும் நேற்று சோர்வடைந்த நிலையில் இருக்கக் காணப்பட்டனர். [வா]

நம்இன

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

சமூக நலனில் அக்கறை கொண்டுள்ள எமது சங்கம் எம்மத்தியில் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்து சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதைப் பாராமுகமாக இருக்க முடியாது

சுதந்திரத்திற்காகப் போராடும் நாம், நம் இனத்தில் ஒரு வருடைய சுதந்திரம் பறிபோவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது

இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைக்கும் சக்தியுள்ளவர்கள் எல்லோரும் ஒன்று திரண்டு பெருந்தன்மையுடன் இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைக்கும்படி வேண்டுகின்றோம்.

நேற்று பிரபா சாகும்வரை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விரதத்தை மேற்கொள்வதற்கு முன்னர் பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"கடந்த இரு வாரங்களாக இந்திய மத்திய மாநில அரசுகள் எமது இயக்கம் மீது மேற்கொண்ட நடவடிக்கைகள் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தைப் பெருமளவில் பாதித்துள்ளது- தமிழீழமக்களை இனவாரியாக ஒழித்துக்கட்ட சிங்கள இனவாத அரசு முழுமூச்சாக இயன்றுவரும் இவ்வேளையில் எமது ஆயுதங்களைப் பறித்தும், எமது தகவல் தொடர்பு சாதனங்களைக் கைப்பற்றியும், எமது நடமாட்டங்களைக் கண்காணித்தும் எம்மிடம் பல அழுத்தங்களைப் பிரயோகித்து மத்திய மாநில அரசுகள் மேற்கொண்டு வரும் இந்த நடவடிக்கை சிங்கள அரசின் கையை பலப்படுத்துவதோடு தமிழீழ மக்களின் போராழிவுக்கு வழி வகுப்பதாக அமையும் என அஞ்சுகின்றோம்.

"இன அழிவை எதிர்நோக்கி இருக்கும் எமது மக்கள் பாரதநாட்டை குறிப்பாக தமிழ்நாட்டின் மீது அபார நம்பிக்கை வைத்திருப்பவர்கள் வரலாற்று ரீதியாக, கலாச்சார ரீதியாக பாரதத்துடன் ஆழமான ஆன்மீகத் தொடர்புகளை வைத்திருக்கும் எமது மக்கள் பாரதநாடு எமது பாதுகாவலனாக இருந்துவரும் என நம்பி வாழ்ந்தவர்கள் ஆனால் மத்திய மாநில அரசுகளின் சமீபத்திய நடவடிக்கைகள் எமது மக்களை பாதுகாப்பற்ற பெரும் ஆபத்தான சூழ்நிலையில் தள்ளியுள்ளது.

தமிழ் நாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை வாரி மகிழ்ச்சியும் உற்சாகமும் கொண்ட சிங்கள அரசு தமிழ்ப் பிரதேசங்கள் மீது ஒரு பாரிய படையெடுப்பை மேற்கொள்ள ஆயத்தங்கள் செய்து வருகிறது 21-11-86ல் முல்லைத்தீவில் சிங்கள ராணுவம் பெருந்தொகையான அப்பாவித் தமிழர் மீது பெரியளவிலான தாக்குதலை நடத்தியதாக அறிகிறோம்

எமது இயக்கம் தமிழ்நாட்டில் எவ்வித சமூகவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை அப்படியிருந்தும் எமது மக்களின் பாதுகாப்பிற்காக வைத்திருந்த ஆயுதங்கள் பறிபோனபோது நாம் வேதனையடைந்தோம் எனினும் நம் உறுதிதளரவில்லை ஆனால் நாம் எமது மக்களோடும் போராளிகளோடும் தொடர்புவைத்திருந்த தகவல் தொடர்பு சாதனங்கள் எம்மிடமிருந்து பறிக்கப்பட்ட நடவடிக்கையானது மிகவும் பாதூரமானது தமிழீழவிடுதலைப்போராட்டத்திலிருந்து எம்மை முற்றாக அன்னியமாக்கிவிடும் ஆபத்தான நடவடிக்கையாகவே இதைக் கருதுகிறோம்

தமிழீழ மக்கள்மீது இழைக்கப்படும் அநியாயங்களையும் அட்டூழியங்களையும் உலகத்திற்கு வெளியிடும் ஒரே செய்தித் தொடர்பைத் தூண்டிவிட்டதால் இச்செய்தியானது சிங்கள அரசு தமிழீழ மக்கள் மீது கட்டவிழ்த்துவிடும் இனப்படுகொலையை மூடிமறைக்க துணைபோவதாக அமையும், இந்நடவடிக்கைக்கு கடும் ஆட்சேபனை தெரிவிக்கும் முகமாக நான் 22-11-86 அதிகாலையிலிருந்து சாகு வரை உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருகிறேன், தமிழீழ மக்களின் இன்றையஇக்கட்டான நிலையை தமிழ் நாட்டு மக்களுக்கும் உலகமக்களுக்கும் எடுத்துக்காட்டவே நான் இந்தக் கடும் நடவடிக்கையை எடுத்தேன். எமது தகவல் தொடர்பு சாதனங்கள் எம்மிடம் உடனடியாக ஒப்படைக்கப்பட வேண்டும், என்மீது போடப்பட்டுள்ள பொலிஸ்கண்காணிப்பு உடன் நீக்கப்பட வேண்டும். அல்லாவிடில் நான் பாதுகாப்பற்ற எமது மக்களுக்காக தமிழீழம் சென்று போராடுவதற்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளுமின்றி அனுமதிக்கப்பட வேண்டும். இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் நான் தொடர்ந்து சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன் என உறுதியாகக் கூற விரும்புகிறேன். [மா]

இரண்டாவது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளில் புறப்பட்டு ஆஸ்பத்திரிக்குச்சென்ற இணுவிலைச் சேர்ந்த வே. கனகரத்தனசிங்கம் [வயது 40] என்ற ஆஸ்பத்திரி ஊழியரே பலியானவராவார்.

ஆஸ்பத்திரி வீதியில் சென்று கொண்டிருந்த போது ஷெல் தாக்குதலில் காயமடைந்தார் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அவசர சிகிச்சையின் பின் பிற்பகல் 2-50 மணிக்கு மரணமானார்.

மாலை ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் மற்றும் ஊழியர்கள் இவருக்கு அஞ்சலி செலுத்தினர் இச்சம்பவம் தொடர்பாக ஆஸ்பத்திரி ஊழியர்கள் அவசர கூட்டமொன்றை இன்று கூட்டவுள்ளனர்.

மேலும் ஷெல் தாக்குதலால் யாழ் முருகன் ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளர் எஸ். சின்னப்பு (வயது 60), முஸ்லிம் இளைஞரான யாழ்ப்பாணத்தை சேர்ந்த அப்துல் அலீஸ் (வயது 37) ஆகியோரும் பலியானார்கள்.

நேற்றுக்காலை 10-30 மணியளவில் மலையன் கோயிலடி முன்னால் ஷெல் விழுந்து வெடித்ததாகவே இவ்விருவரும் பலியானார்கள். பலியான இருவரையும் காயமடைந்த சிலரையும் அவசர மருத்துவ சேவை வான் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றது.

கையில் நிலையமொன்றில் பணியாற்றும் அப்துல் அலீஸ் யாழ் ஆஸ்பத்திரிக்குச் சென்று மருந்து வாங்கியபின் வீடு திரும்பும்போது மலையன்கோயிலடி முன்னால் இவரது காலடியில் ஷெல் வீழ்ந்து வெடித்ததனால் ஸ்தலத்திலேயே மரணமானார். வெடித்த ஷெல் ஒன்றின் பாகமொன்று அவ்வீதியால் சென்ற சின்னப்புவை தாக்கி அவரும் ஸ்தலத்திலே பலியானார். இச் சம்பவத்தில் மேலும் நால்வர் காயமடைந்தனர்:

யாழ் ஆஸ்பத்திரியில் நேற்று மேல் மாடியிலுள்ள கிளினிக் தொடரும் நடைபெறவில்லை வெளிநோயாளர் பகுதியில் குறைந்தளவு நோயாளரே காணப்பட்டனர். [இ-கே]

அப்பாவி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பிய ஜே. என். டிக்ஸிட் இன்றுமாலை ஜனாதிபதியைச் சந்தித்து தற்போது இனப்பிரச்னை தீர்வுக்காக இந்திய அரசு மேற்கொள்ளும் மாற்று யோசனை குறித்தும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஹமீதுடன் பங்களூரிலும் புதுடில்லியிலும் இந்திய உயர் அதிகாரிகள் நடாத்திய பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்தும் மேலும் எடுத்து உரைத்தார்.

இனப்பிரச்னை தீர்வு குறித்து அடுத்த இருவார காலத்துக்குள் இலங்கை தரப்பில் புதிய திட்டங்கள் இந்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்படலாம் என்றும், மீண்டும் இலங்கை இந்திய உயரதிகாரிகளின் சந்திப்பு இடம் பெறலாமென்றும் அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள். (எ)

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இச்செயல்— —

இரணுவமுகாமை அண்மித்த பகுதிக்குச் சென்றனர் அங்கு அவர்கள் படங்களை எடுத்து விட்டு விடுதலைப் புலிகளின் காவல் அரணை தாண்டிவரும் போது அதற்கருகிலுள்ள தமது முகாமிலிருந்து விடுதலைப்புலிகள் ஐந்துமுறை துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர் இதனால் எமது தோழர் ஒருவர் காயமடைந்தார். ஏனைய எமது தோழர்கள் உடனடியாக நிலத்தில் விழுந்து பாதுகாப்பைத் தேடிக்கொண்டதால் அவர்கள் காயமின்றி உயிர் தப்பினர்.

"எந்த விடயத்தையும் பேசித்தீர்ப்போம் [என்று கடந்த 20ம் திகதி அன்று அறிக்கைவிட்ட இவர்கள் எந்தவித காரணமும் இல்லாமல் 21ம் திகதி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததானது எமக்கு ஐயத்தை உருவாக்குகின்றது இந்திய அரசும் இலங்கை அரசும் இராணுவ ராஜதந்திர நிர்ப்பந்தங்கள் அதிகரித்துள்ள இவ்வேளையில் இயக்கத் தோழரை சுட்டு ஆத்திரமூட்டுவதனது அசாதாரண நிலைமைகளையே தோற்றுவிக்குமென்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணரவேண்டும் என்பதுடன் நிச்சயமாக ஈழவிடுதலைப்போராட்டத்திற்கு இப்படியான போக்குகள் பலமான பின்னடைவுகளை ஏற்படுத்துமென்பதையும் உணரவேண்டு

"விடுதலைப் புலிகளின் நடந்து முடிந்த சம்பவங்கள் தொடர்பாக யாழ் பிராந்திய தளபதி கிட்டுவுடன் பேசிய போது தமது தோழர்கள் சுடவில்லையென்றும் இராணுவ முகாமிலிருந்து இராணுவமே சுட்டதாகவும் கூறினார். ஆனால் உண்மை நிலை அதுவல்ல. இவர்களது காவலரணைத்தாண்டி துப்பாக்கிரவைகள் வரமுடியாதென்பதுடன் அங்கு நின்ற பொதுமக்களும் விடுதலைப் புலியினர் எம்மை நோக்கிச் சுட்டதைக் கண்டுள்ளனர் இது தொடர்பாக ஒரு விசாரணையை விடுதலைப்புலிகள் தமது தோழர்கள் மத்தியில் நடத்துவது நல்லதென நினைக்கின்றோம். அத்துடன் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை தவிர்த்துக்கொள்வதானது ஈழவிடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு ஆரோக்கியமானதாக இருக்கும்"

புலிகளின்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியானார்கள்

தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் வீரமரணமடைந்த 2ம் லெப்டினன்ட் கணேஷ் (டொமினிக் சாந்தன், கனகபுரம்), சிவா (பாலன் - நெடுங்குளம்) ஆகியோருக்கு தமது வீரஅஞ்சலியைச் செலுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது

முள்ளியவளையில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம் பெற்ற நேரடி மோதலில் தமது போராளியன தயா வீரமரணம் அடைந்துள்ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிரைக்காக்க
இரத்ததானம் செய்யுங்கள்

யாழ்ப்பாணம் ஞாயிறு

உயிருக்காகப்போராடும் எம் உடன்பிறப்புக்களின் உயிரைக் காப்பதற்கு இரத்ததானம் செய்ய முன்வரும்படி அவசர மருத்துவ சேவை வேண்டுகோள்விடுத்துள்ளது

இரத்ததானம் செய்ய முன்வருபவர்கள் யாழ்போதனா வைத்தியசாலை இரத்த வங்கியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வா)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
ஞாயிற்றுக்கிழமை23-11-86

பொலிஸ் நிலையம் மீது குண்டு வீச்சு

[மட்டக்களப்பு நிருபர்]

களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையம் நோக்கி நேற்று முன் தினம் குண்டொன்று வீசப்பட்டது. இதனால் பொலிஸ் விடுதி சேதமடைந்தது. இச் சம்பவத்தையடுத்து பொலிஸார் திருப்பிச் சுட்டதாகவும் ஆனால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லையெனவும் தெரிய வருகிறது.

இச் சம்பவத்தையடுத்து களுவாஞ்சிக்குடி நகரில் நேற்றும் பதற்றம் நிலவியது. [ஊ]

கவின்கலை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழர் கலாசார அவையின் கவின்கலையகங்க நிகழ்ச்சிகள் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

யாழ் விக்சர் கலையகங்கில் வாராந்தம் ஞாயிறு தோறும் நடைபெறுவது தெரிந்ததே.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டதைத் தொடர்ந்தே நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்பட்டன

கடைகளிலிருந்து பொருட்கள் மாற்றப்படுகின்றன

யாழ்ப்பாணம் ஞாயிறு

யாழ் நகரில் இரு தினங்கள் நடந்த ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து நேற்று சில கடைகளிலிருந்து பொருட்கள் பாதுகாப்புக்கருதி வேறு இடத்திற்குமாற்றப்பட்டன. [இ]

● தலவாக்கெல்லையில்

தொழிலாளி தாக்கப்பட்டதையடுத்து சுமார் 1000 பேர் வேலை நிறுத்தம்

(நுவரெலியா நிருபர்)

தலவாக்கலை மடக்கம்பர தோட்டத்தில் அண்மையில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தையடுத்து அத்தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 1 000 தொழிலாளர்கள் 20ம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இத்தோட்டத்தில் வேலை செய்வதற்கு போதிய தமிழர் இருந்தும் வெளியிலிருந்து சிங்களவர் கொண்டுவரப்பட்டு பதிவு செய்யப்பட்டு தொழில் வழங்கப்படுகின்றதாம். இது சம்பந்தமாக 19ம் திகதியிரவு தோட்டத் தலைவர்கள் தோட்டத்துரையுடன் பேச்சுவார்த்தை நடாத்தச் சென்றுள்ளனர்.

தோட்டத்துரை தனது அலுவலகத்தை பூட்டிவிட்டு வெளியில் வந்து எமது நிர்வாகத்தில் தலையிட நீங்கள் யார் எனக்கேட்டு ஒரு தொழிலாளியின் தலையில் அடித்தாராம் இதனால் அவருக்கு தலையிலிரத்தக்காயம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து தோட்டத்துரையின் பங்களாவையும் அவருக்கு உதவிசெய்யும் பெரிய கிளார்க்கரின் வீட்டை உடைத்த தொழிலாளர்கள் அங்கிருந்த பொருட்களைக் கொள்ளையடித்துள்ளனர்.

அத்துடன் 20ம் திகதி வியாழக்கிழமையிலிருந்து தொடர்ச்சியாக வேலை நிறுத்தமும் செய்துவருகின்றனர்

(ஊ-கே)

பைத்தியக்காரராக நடித்த அதிரடிப்படையினரால் 50 பேர் கைது

[மட்டக்களப்பு நிருபர்]

மட்டக்களப்பு முகத்துவாரம் வீதியில் அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் சுமார் 50 பேரைக் கைது செய்தனர்.

பைத்தியக்காரன் வேடத்தில் அதிரடிப்படையினரில் ஒருவர் இவ்வீதியில் நடமாடியதாகவும் இவரை வேடிக்கை பார்க்க சிறுவர்கள் உட்ட பல பொதுமக்கள் கூடியதாகவும் அப்போது அங்கு மறைந்திருந்த சிவில் உடை தரித்தோர் திடீரென அங்கு வந்து வேடிக்கை பார்த்தவர்களைக் கைது செய்து கல்லடி முகாம் கொண்டு சென்றதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது

கைதுசெய்யப்பட்ட எவரும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. [ஊ-கே]

ஐப்பானில் எரிமலை வெடிப்பு மக்கள் இடம்பெயர்வு

டோக்கியோ, நவ. 22

ஐப்பானில் டோக்கியோவிற்கருகில் மீகார எரிமலைவெடித்ததினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களை அவர்களின் இருப்பிடங்களிலிருந்து அப்புறப்படுத்துப்பணி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

இவ்வாறு சுமார் பதினொராயிரம் மக்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்துள்ளனர்.

இது வரையும் இவ்எரிமலையினாலேற்பட்ட உயிர்ச்சேதம் பொருட்சேதம்பற்றிய தகவலெதுவும் அறிவிக்கப்படவில்லை.

இந்த புதியஎரிமலைவெடிப்பு நில நடுக்கத்துடன் இருந்தது. என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 12 ஆண்டுகளாக அமைதியாக இருந்த இந்த எரிமலை கடந்த வாரத்தில் எரிமலைக் குழம்பையும் புகையையும் வெளியிட்டது. [ஒ]

மட்டு. விலிருந்து 100 பேர் பூஸாவுக்கு

[மட்டக்களப்பு நிருபர்]

மட்டக்களப்புப் பகுதியிலுள்ள பாதுகாப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 100 இளைஞர்கள் நேற்றுக்காலை இரண்டு இராணுவ லாரிகளூடாக பூஸா முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். [ஊ]

ரேகன் கொலைசெய்யப்பட்டு ஒருவருடம் பூர்த்தியாகிறது

ஈ.பி.ஆர்.எல்.எவ்.

யாழ்ப்பாணம், ஞாயிறு

"சர்வதேசப் பாசறையில் பயிற்சிபெற்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப்படையின் வன்னிப்பிராந்திய நிர்வாகியாக செயற்பட்டுவந்த தோழர் றேகன் அராஜகவாதிகளால் கொலை செய்யப்பட்டு ஒரு வருடமாகின்றது"

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் மக்களால் நேசிக்கப்பட்ட அவன் மக்களுக்குசேவை செய்யும்போதேகொலைப்பட்டான் கொலைகாரன், கொள்ளைக்காரன் என அநாகரிகமாக பட்டம் சூட்டப்பட்டு கொல்லப்பட்ட இவன் தனது இறுதி மூச்சுவரை தனது மக்களுக்காகவும் அவர்தம் உரிமைகளுக்காகவும் போராடியவன் அராஜகவாதிகளின் கொலைகள் தோழர் றேகனுடன் மாத்திரம் முடிந்து விடவில்லை அது இன்னும் தொடர்கதையாகவே உள்ளதானது வெட்கித் தலைகுனியவேண்டிய செயலாகும் என்பதுடன் நாசரீக சமுதாயத்தில் இப்படியான செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கதுமாகும் அராஜகவாதத்தால் தோழர் றேகனின் உயிரைத் தான் போக்கமுடிந்ததே யொழிய அவரது கொள்கைகளை அவர்களால் தோற்கடிக்க முடியவில்லை அராஜகவாதத்தை தோற்கடிப்பதே நாம் தோழர்றேகனுக்கு செலுத்தும் அஞ்சலியாகும்"

முகாமில் குண்டு வெடிப்பு

மட்டக்களப்பு நிருபர்

கல்லடி அதிரடிப்படை முகாமினுள் நேற்றுக்காலை 11 மணியளவில் அடுத்தடுத்து இரு குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன.

இதனால் அம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்களைப் பார்க்க வந்த அவர்களின் உறவினர்கள் சுமார் 25 பேர் நாலாபக்கமும் சிதறியோடினர். [ஊ]

காத்தான்குடி பள்ளிவாசல்

நம்பிக்கையாளர் மீது ஊர்காவற்படை தாக்குதல்

(மட்டக்களப்பு நிருபர்)

காத்தான்குடி முஹைதீன் லெப்பை பள்ளிவாசலில் பிரதம நம்பிக்கையாளரான ஏ. எம். அகமது மீரா சாகிபு ஹஜியார் ஊர்காவற்படையினரால் கடந்த வியாழக்கிழமையன்றுதாக்கப்பட்டார்.

அங்குள்ள முஸ்லிம் மையவாடியைச் சுற்றிசுற்று மதில் கட்டுவது சம்பந்தமாக ஹாஜியாருக்கும் ஊர்காவற்படையினருக்குமிடையே எழுந்த தகராறே ஹஜியார் தாக்கப்பட்டதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது. தாக்குதலுக்குள்ளான ஹாஜியார் தனியார் மருத்துவமனையொன்றில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதலுக்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக நேற்று சனிக்கிழமை ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது ஆயினும் நேற்றுக்காலை அதிரடிப்படையினர் காவல்நடையாக வந்ததையடுத்து ஹர்த்தால் பிசுபிசுத்தது இதையடுத்து வேறொரு தினத்தில் ஹர்த்தால் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ தாக்குதலில் காயமடைந்தோர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

முல்லைத்தீவில் நடந்த இராணுவத் தாக்குதலில்காயமடைந்த 7 பேர் நேற்று பிற்பகல் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

தொடர்ச்சியாக நடந்த ஷெல் தாக்குதலிலும் துப்பாக்கி சூட்டிலும் இவர்கள் காயமடைந்தாக தெரிவிக்கப்பட்டது,

காயமடைந்தவர்கள் விபரம்: பெனிமல் [24 வயது] முள்ளியவளை, மாரிமுத்து [24 வயது] முள்ளியவளை நாதன் 26 வயது) முல்லைத்தீவு, எஸ். அகிலேஸ்வரி (40 வயது) முள்ளியவளை, எஸ். சண்முகம் (27 வயது) முழங்காவில், கே. சர்மா (25 வயது) முள்ளியவளை, முத்து [16 வயது) முள்ளியவளை. [இ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஆதாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126

மரண அறிவித்தல்

திருமதி மயில்வாகனம் சிவஞானம்

திருமதி மயில்வாகனம் சிவஞானம் காலமானார். இவர் காலஞ்சென்ற வவுனியா செல்வசந்நிதிமில் உரிமையாளர் மயில்வாகனத்தின் மனைவியும், வவுனியா செல்வசந்திமில் உரிமையாளர் திருவருட் செல்வத்தினதும், தேம்பாமலரினது தாயாரும் வவுனியா கிருஸ்ணமில் உரிமையாளரும் இளைப்பாறிய ஆசிரியர் நடராசாவினதும், நாகேஸ்வரியினதும் மாமியாரும், தேவசேனா டிகோயா தமிழ் வித்தியாலய ஆசிரியை, மோகனசந்திரன் சவுதிஅரேபியா, தேவராஜன் ஜேர்மனி, தேவபாலன் பிரான்ஸ், தேவகுமாரன், தேவசீலன் தேவகிருஷ்ணன், தேவரஜனி, தேவமௌரி, தேவஇந்திரா, நந்தகுமாரன் இந்தியா, செல்வக்குமாரி, செல்வக்குமாரன், தவகுமாரன் இந்தியா, புஷ்பகுமாரி கிஷோகுமாரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார் அன்னாரின் பூதவுடல் திங்கட்கிழமை [24 11-86 அன்று தாவடி மயானத்தில் இறுதிக்கிரியைகள் செய்யப்படும். (C 5967)

மரண அறிவித்தல்

பாக்கியம் செல்லத்துரை

மூளாய் ரோட், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி பாக்கியம் செல்லத்துரை காலமானார். இவர் தம்பிப்பிள்ளை செல்லத்துரையின் அன்பு மனைவியும் சிவராமலிங்கம் [வனபரிபாலன இலாகா, கிளிநொச்சி], யோகலிங்கம், தவேஸ்வரி, ஜெயநாதலிங்கம், இராசலிங்கம், புவனேஸ்வரி, மங்களலிங்கம் (பாரெயின்) இரதிதினேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும், கமலாம்பாள், ராதா, ஸ்ரீகாந்தன், நித்தியலட்சுமி, தில்லைநடராஜா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார் அன்னாரது பூதவுடல் தகனக்கிரிகைக்காக மூளாய் ரோட், வட்டுக்கோட்டை இல்லத்திலிருந்து 23-11-86 இன்று மாலை மூன்று மணிக்கு வழக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்:
தில்லைநடராஜா.

(C 5973)

தம்பிராசா சாம்பசிவம் (சித்தார்த்தன்)

நல்லூர் 131/4 பருத்தித்துறை வீதி தசாம்பசிவம் (Good Luck Emborium) 21-11-86 பி.ப அகால மரணமானார். இவர் சிவசோதியின் அன்புக்கணவரும் சுகந்தினி (யாழ். பல்கலைக்கழகம் வர்த்தகபீடம்) பரமகுரு, காந்தினி, தாரணி, தயாளன் ஆகியோரது பிரிய தந்தையும், காலஞ்சென்ற தம்பிராசா பூரணம் தம்பதிகளின் கனிஷ்டமைந்தனும் காலஞ்சென்ற சிவகுரு, திருமதி சிவபாக்கியம் சிவகுரு ஆகியோரது மருமகனும், சிவசங்கரன் (சின்னத்துரை அன்பிறதர்ஸ்) நாராயணன் ஆகியோரது சகோதரனும் இராசம்மா, பத்மாவதி, கனகாம்பிகை தணிகாசலம் (பிரான்ஸ்), மகேந்திராசா (யாழ் விற்பனைத் திணைக்களம்), பத்மநாதன் (பிரான்ஸ்), தில்லைநாதன் (யாழ் பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர், பவாணி, கருணாகரன் (பிரான்ஸ்), கெங்காதரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22-11-86 பிற்பகல் கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெற்றனஎன்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவர்க்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்: மனைவி, மக்கள்.

(C 5974)